ISSN 1703-9185

# ஆத்மஜோதி

## Arthmajothy

April- June 2011

கர வருட

சித்திரை - ஆனி 2011

இலவச வெளியீடு

3000 பிரதிகள்



50ஆவது அகவையைக் கொண்டாடும் 'செஞ்சொற் செல்வர்' திரு. ஆறு திருமுருகன் அவர்களுக்கு 'ஆத்மஜோதி'யின் வாழ்த்துக்கள்

# V. K. JEGAN INC.

## Custom Framing Book Depot

இங்கு வீடு குடிபுகுதலுக்கான படங்கள், மற்றும்
சுவாமிப் படங்கள், அத்துடன் உங்கள் Photo,
திருமணவாழ்த்து மடல்கள் போன்ற பலதரப்பட்ட
படங்கள் உங்கள் விருப்பங்களுக்கேற்ற வகையில்
Fram செய்து கொடுக்கப்படும்.

அத்துடன் இங்கே, இலங்கை, இந்திய
பத்திரிகைகள், சஞ்சிகைகள், நாவல்கள்,
கனேடிய பாடத் திட்டத்திற்கு அமைவான
ஆங்கிலப் பாடப் புத்தகங்களும் உண்டு.

**Kiruba or Siva:** 416-497-5690
Cell 416-508-4940

2537 Warden Ave., Scarborough
(Warden & Bridel town Circle)

# Non-Medical Insurance

வைத்திய பரிசோதனையற்ற
ஆயுட் காப்புறுதியை
பெற்றுக் கொள்ள அழையுங்கள்



## கென் கிருபா

**Ken Kirupa, AICB**
Life Insurance Broker
**416.294.9322**
Liland Insurance Inc,
759 Warden Avenue, Toronto, ON. M1L 4B5.
**www.familyprotection.ca**




கனடா மலர் 12:
இதழ் 2
கர வருடம்
சித்திரை- ஆனி
திரு. ஆண்டு -2041
ஆங்கில ஆண்டு 2011

கௌரவ ஆசிரியர்
டாக்டர் இ. இலம்போதரன்

பிரதம ஆசிரியர்
திரு. வி. கந்தவனம்

உதவி ஆசிரியர்கள்
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

எழுத்தமைப்பு
திரு. மா. கனகசபாபதி
அச்சுப் பதிப்பு
விவேகா அச்சகம்

வெளியீடு
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651



தொடர்பு முகவரி
Siva Muthulingam
ARTHMAJOTHY ILLAM
1473 Birchmount Rd.
Toronto, ON. M1P 2G4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org


உ
சிவமயம்

# ஆத்மஜோதி

தாபிதம்: *1948*


ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185


## உள்ளடக்கம்     பக்கம்


1. தெய்வப் பெருமகன் ஆறுதிருமுருகன் ... 2
2. எங்குமுள்ள பிள்ளையார் ... 3
3. கோயில் மூத்த திருப்பதிகமும் ... 4
4. சாயி அவதாரமும் பயன்பாடுகளும் ... 8
5. சிவனடியார் நிந்தை சிவ நிந்தையே ... 11
6. கணபதி தியானம் ... 15
7. இந்துசமயப் பேரவைச் செய்திகள் ... 18
8. கந்தசஷ்டித் திருநாளில்... ... 22
9. Yoga Swamy & Guru Paramparai ... 24
10. திருத்தல யாத்திரை 2010 ... 26
11 வாழ்க்கைத் தத்துவம் ... 31
12 ஒரு தமிழ் நாட்டுக் காப்பியம் ... 35
13. அஞ்சுவுது யாதொன்று மில்லை ... 42
14. இசைமழையில் நனைந்த ... 45
15. ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை ... 47

உ

# தெய்வப் பெருமகன் ஆறு திருமுருகன்

ஆறு திருமுருகன் அகவை ஐம்பதிலும்
தேறி இருக்காது தெய்வப் பணிகளிலே
ஊறி இருக்கின்றார் ஊக்கம் குன்றாத
பேறும் பெற்ற இவர் தெய்வப் பெருமகனே!

தெய்வப் பெருமகனின் தேவை அறிந்தருளும்
ஐயை தெல்லிநகர் அம்மன் இருக்கின்றாள்
நொய்வார் நலமெய்த நுடங்காத் திருமுருகன்
செய்யும் சேவைகளைச் செய்விப்பதும் அவளே!

சேவை பலவிதமாம் செவிக்கினிய செஞ்சொல்லால்
ஆவி குளிர்ந்தாடும் ஆன்மீகச் சொற்பொழிவு
தேவை உள்ளவர்க்குச் சிவபூமித் திட்டங்கள்
தேவர் வாழ்த்துமுயர் கோயில் திருப்பணிகள்!

செல்வி தங்கம்மா செய்துவந்த அறப்பணிகள்
நல்ல முறைநடக்க நடவடிக்கை தானெடுத்தல்
கல்விப் பயனோங்கக் கல்லூரி நிருவாகம்
சொல்லி முடியா திவர்தோளின் சுமைகளம்மா!

தேடும் வறியவர்க்குத் திருமுருகன் திரவியமாம்
வாடும் பயிர்வாழ வந்தமழை நீதானாம்
நீடு நீலமணிக் கண்டன்போல் நீவாழ
கூடி அவன்கழல்கள் கும்பிடுவோம் வாழியவே!

மண்விண் நீர்தீக்கும் வளிக்கும் வயதில்லை
ஒண்மைத் தமிழுக்கும் வயதென் றொன்றில்லை
திண்மை மனத்தோடு சீரார் திருமுருகன்
வண்மைத் தொண்டுக்கும் வயதில்லை வாழியவே!

-வி. கந்தவனம்

---

*பின்பற்றுவது சுலபம். வழிகாட்டுவது சிரமம்.*
*- சுவாமி சிவானந்தர்*

உ

# எங்குமுள்ள பிள்ளையார்

## மண்டைதீவு – சித்திவிநாயகர்

முற்றாத மனக்கனியை முற்ற வைப்பார்
　　மூளாத பத்தியினை மூள வைப்பார்
உற்றாரை உலகியலை உதற வைப்பார்
　　உருகிவிழி பெருகவுடல் பதற வைப்பார்
கற்றாவின் கன்றெனவே கதற வைப்பார்
　　கடலோசைக் கலைமண்டை தீவைக் காத்து
வற்றாத அருள்மழையைப் பொழியுஞ் சித்தி
　　விநாயகரை வாழ்முதலாய் வணங்கு வாமே. (94)

## புங்குடுதீவு – கலட்டி பட்டிவிநாயகர்

விண்ணகத்துச் சூரரன்றி மனத்தில் விஞ்சி
　　வேதனைசெய் சூரனையும் வீழ்த்த வந்தார்
கண்ணுதலார் ஆனைமுகக் கருணை யாளர்
　　கடுவினைகள் கட்டறுத்துக் காக்குந் தோழர்
புண்ணியத்துப் புங்கைநகர்க் கலட்டி போந்து
　　பொலிந்தருளிப் புதுமைசெயப் புடைசூழ்ந் தன்பர்
பண்ணிசைத்துப் பணிந்துருகிப் பரவி வாழும்
　　பட்டிவிநா யகர்பாதம் பணிவோம் யாமே. (95)

## புங்குடுதீவு – இறுப்பிட்டி
## வரசித்தி விநாயகர்

தங்கிவான் செல்வங்கள் தழைத்து மல்கும்
　　சமயத்தில் மேலான சைவம் ஓங்கும்
எங்குமே அமைதியுடன் இன்பஞ் சூழ
　　எல்லோரும் ஒற்றுமைபூண் டிலங்கி வாழும்
புங்கைமா நகர்நாளும் பரவிப் போற்றப்
　　பொழில்சூழும் இறுப்பிட்டி பொலிந்தி லங்கும்
மங்கைபா கத்தார்க்கு வாய்த்த மைந்தர்
　　வரசித்தி விநாயகரை வணங்கு வாமே. (96)

# கோயில் மூத்த திருப்பதிகமும் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகமும்

பேரறிஞர் முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

திருமுறைகள் தேடி எடுக்கப்பட்ட இடம் தில்லையம்பலம். நம்பியாண்டார் நம்பி இம்முயற்சியில் ஈடுபட்டவர். அதற்கு உத்வேகம் கொடுத்தவர் சோழமன்னன். ஒரு லட்சத்து இரண்டாயிரம் பாடல்களிற் பெற்றவை 8250 பாடல்கள் மட்டுமே. மீதி செல்லுக்கு (கறையானுக்கு) இரையாயின.

இப்பாசுரங்களைச் செத்தவீட்டுப்பாட்டென வாய் கூசாமற் சொல்லும் பெருமக்களும் துரைமக்களும் எம்மத்தியில் இல்லாமல் இல்லை. பன்னிருதிருமுறைகளில் எட்டாம் திருமுறையில் திருவாசகமும், திருக்கோவையாரும் இடம்பெற்றுள்ளன. இவற்றை அருளிச் செய்தவர் திருவாதவூர்ச் செழுமறைமுனிவர். அவரை மாணிக்கவாசகரென அழைத்தவர் ஆடல் அரசு.

திருமுறைகள் அமைப்பிற் பத்துப்பாடல்களால் ஆனது பதிகம். எண்ணிக்கை கூடலாம் குறையலாம். எனவே திருவாசகத்தில் ஐம்பத்தொரு பதிகங்கள் அமைந்துள்ளன. இப்புனித பாடலில் வெளிநாட்டவரும் மயங்கினர்.

திருவாசகப் பேரேட்டில் இருபத்தோராம் பதிகம் கோயில் மூத்த திருப்பதிகம். இதிற் பத்துவாசகங்கள் அந்தாதித் தொடையாய்ப் பாடப்பெற்றுள்ளன. பாடல்கள் தோறும் பொன்னம் பலத்தெம்முடியா முதலே, பொன்னம்பலத்துக் கூத்துகந்தானே, பொன்னம்பலத்தெம் முழுமுதலே, பொன்னம்பலத்தரசே, அரசே பொன்னம்பலத்தாடும் அமுதே, ஈசா பொன்னம்பலத்தாடும் எந்தாய், இரங்கும் நமக்கு அம்பலக்கூத்தன் என்றென்று ஏமாந்திருப்பேனை, பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம்பலக்கூத்தா, பொன்னம்பலத்தாடும் தலைவா, பல்கால் உன்னைப் பாலித்துப் பரவிப் பொன்னம்பலம் என்றே என்ற பொன்வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

திருவாசகப் பதிப்புகளிலே இப்பதிகம் பொன்னம்பலத்திலே அருளிச் செய்யப்பட்டது என அச்சாகியுள்ளது. திருவாசகத்தில் பெருந்துறைக்குத் தனிமுத்திரையுண்டு. எனினும் “பேணுபெருந் துறை” என்ற தலம் இரு இடங்களில் வரக் காணலாம். திருப்பள்ளி எழுச்சியிலே, “திருப்பெருந்துறையுறை கோயிலுங்காட்டி” (பதிகம்

---

*நற்குணங்களாகிய பூக்களால் பகவானைப் பூசை செய்.*
*- சுவாமி சிவானந்தர்*

2ஆம் . பாட்டு 8) என வருவதால் மூத்த கோயில் மாணிக்கருக்கு அதுதான் என்ற கருதுகோளும் நிலவுகிறது. இதற்கு அடுத்ததாக (22) கோயில் திருப்பதிகம் இடம்பெற்றுள்ளமை கருத்திற் கொள்ளத்தக்கது. சிதம்பரம் ஐந்து சபைகளில் முதற்சபை. அதுவே பொற்சபை, பொன்னம்பலமுமாம். ஐந்து சபைகளிலும் ஆடும் அரசன் இரவில் ஒடுங்கும் மூலட்டானமும் இதுவே. இங்கேதான் மாணிக்கர் கூத்தப்பிரானோடு இரண்டறக்கலந்தது. சிதம்பரம் தில்லைவனமாய் இருந்தது. ஆக இது மூத்த கோயிலும் முதற்கோயிலுமாம். எம்பெருமான் திருவாசகத்தைப் பொறித்த தலமும் இதுவே. நாம் திருச்சிற்றம்பலம் சொல்லி, திருமுறை ஓதும் மரபு உடையோம். இறைவன் ஆட்டுகிறான், நாம் ஆடுகிறோம். உலக இயக்கமே கூத்தனின் அசைவிலே தங்கியுள்ளமை வெளிப்படை. இதனால் வந்ததே உலகம் அம்பலவிதம் என்ற உயிருள்ளவாக்கு. பொற்சபை சிதம்பரம். வெள்ளிச்சபை மதுரை, தாமிரசபை திருநெல்வேலி, சித்திரசபை குற்றாலம்.

மாணிக்க மொழியார், திருவாசகத்தின் ஒண்பொருள் ஆடும் பிரானே என்று கைகாட்டித் தம்முருவம் காட்டாமல் மறைந்தார். திருவாசகத்தமிழ் இருதலை மாணிக்கம் போன்றது. கரையவைத்து உயர்வு நல்கும் பெற்றியது திருவாசகம். நாம் படிக்கும்போது நம்மோடு பேசுவது தெய்வத்திருவாசகமே. அ∴து மன்பதைக்கு உய்வைத்தருவது. திருவாசகப்பூசை முக்கியமானது.

ஆடல் அரசன் இரத்தினசபையிலே ஊர்த்துவ தாண்டவம் ஆடுகிறான். அதுவே திருவாலங்காடு. இத்தலத்தோடு தொடர்புடையவர் காரைக்கால் அம்மையார். புனிதவதி இயற்பெயர். இவர் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு என ஆய்வாளர் கூறுவர். ஆளுடை அடிகள் அருளிய கோயில் மூத்த திருப்பதிகம் அநவரதமும் பாராயணம் செய்ய உகந்தது. கோயில் என்றாற் சைவசமயிகட்குச் சிதம்பரத்தையே குறிக்கும். ஸ்ரீரங்கம் வைணவர் போற்றும் கோயில் மூத்த குடி தமிழ்க்குடி. அவர்களின் மூத்த கோயில் சிதம்பரமே. அதன் மேல் எழுந்த பாசுரங்களும் மூத்த திருப்பதிகங்களாம்.

இவ்வண்ணமே காரைக்காலம்மையார் பாடிய மூன்று பிரபந்தங்கள் தொன்மை ஆனவை. ஏனெனில் மூவர் பாடியதற்கு முந்தியது, இப்பதிகம். தோத்திரமாலைகளில் முதன்முதல்

---

*மன அமைதியே மனிதனுடைய விலை உயர்ந்த உடைமை.*

*- சுவாமி சிவானந்தர்*

பாடப்பட்டவை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள். புனிதவதியாரின் புனிதவாக்குகள் பின் வருமாறு. பதினோராந் திருமுறையில் திருமுகப் பாசுரத்தை அடுத்து இவை வருகின்றன.

1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
2. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
3. திருஇரட்டைமணிமாலை
4. அற்புதத்திரு அந்தாதி

முதலாவது பிரபந்தத்திலே பன்னிரு பாசுரங்கள். இறுதிப்பாசுரம் பலச்சுருதி. பதிகப் பயன் கூறுவது. அவ்வண்ணமே இரண்டாவது மூத்த திருப்பதிகத்தில் பதினொரு பாசுரங்கள். இறுதிப்பாடல் முத்திரைக்கவிதை. மணிமொழிப்பிரானோ சிவபுராணத்தின் பூர்த்தியிலே பாடற் பயன் கூறியுள்ளார். தேவார முதலிகள் போலப் பதிகப் பயனைச் சுவாமிகள் ஆளவில்லை. ஆனால் ''நாயேனைத்தன்னடிகள் பாடுவித்த நாயகனை'' (திருக்கோத்தும்பி.12) என உரிமையோடு பாடியுள்ளார்.

காரைக்காலம்மையார் என்பது காரணப்பெயர். இப்பெருமாட்டி தன்னைக் காரைக்கால்பேயெனத் தற்சிறுமைப் படுத்தியுள்ளார்.

இரட்டைமணிமாலை இருபதுபாட்டுகள்.அந்தாதியிலே 101 பாடல்கள் அந்தாதியால் இயற்றப்பட்டன. இறுதிப்பாசுரம் பதிக-பிரபந்தத்தை படிப்பதனால் வரும் பயனைப் பற்றிக் கூறுகிறது. எனவே சம்பந்தருக்கு முற்பட்ட அம்மையாரே (திருமுறை) தேவாரத்துக்கு முனனோடி. மூத்த முதல்வர். இவர் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் தோறும் அப்பன் இடந்திருவாலங்காடே எனவரும்படி பாடியுள்ளார். இஃது அவரின் இதயதாகத்தை வெளிப்படுத்துகிறது. இவை இலக்கணச் சுத்தமான யாப்பமைதி நிறைந்தவை.

இரண்டாவது பிரபந்தத்திலே பேய்கொட்ட முழவங்கூளி பாடக்குழகன் ஆடுமே, கையேந்தி அழகன் ஆடுமே, இறைவன் பெயரும் பெருங்காடே, அந்தி நிருத்தம் அனல்கையேந்தி அழகன் ஆடுமே என அழுத்தம் திருத்தமாகப் பாடப்பட்டிருக்கிறது. ஆடல் அழகனைப் பாடல் செய்த புனிதவதியாரை அம்மையே என

---

*நல்ல எண்ணங்களே ஒவ்வொரு மனத்தின் ஜெபமாலையாக இருக்கட்டும். - சுவாமி சிவானந்தர்*

ஆராமையோடு இமயச்சிகரத்தில் அழைத்த செவ்வி வரலாற்றுப் பெருமைமிக்கதாம்.

எனவே திருமுறைகளை வரிசைப்படுத்தும்போது முதல் வைக்கவேண்டிய அம்மையாரின் திருவாக்குகள் பின்னடைவு பெற்றமை சமயப்பெருமைக்கு ஒரு கறையாம். பிதாமகரான காரைக்காலம்மையாருக்கு முன்னுரிமை கொடுத்திருந்தால் முதற் திருமுறையாய் மிளிர்ந்து இருக்குமன்றோ. சைவப்பெருந்தகையீர், சிந்தித்துப் பாருங்கள். முதன்மைமிக்குள்ள அற்புதத் திருவந்தாதியை நாம் தினமும் நம் இல்லங்களிலே பாராயணம் பண்ணுவோமாக. கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம், கந்தசஷ்டி கவசம், அபிராமி அந்தாதியைப் போற்றுவது போல அற்புதத் திருவந்தாதியைப் படிப்போமாக!

அறிவானுந்தானே அறிவிப்பான்தானே
அறிவாய் அறிகின்றான்தானே - அறிகின்ற
மெய்ப் பொருளும்தானே விரிசுடர் பார் ஆகாயம்
அப்பொருளுந்தானே அவன்

- அற்புதத்திரு அந்தாதி 20

---

**2010 தை மாதத்திற்குப்பின்**
**ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்**

| | |
|---|---|
| திரு. கனகசபை கந்தையா (2010 மார்ச், யூன், செப்ரெம்பர்) | $450.00 |
| அமரர் சின்னத்துரை சசிகாந்தன் நினைவாக (2010) | $200.00 |
| அமரர் வடிவேலு விவேகானந்தராசா நினைவாக (2011) | $300.00 |
| அமரர் செல்லம்மா பரராசசிங்கம் நினைவாக (2011) | $500.00 |
| அமரர் இளையதம்பி ஆறுமுகம் நினைவாக (2011) | $120.00 |
| அமரர் க விமலன் (விசு) நினைவாக (2011) | $150.00 |

**ஆத்மஜோதி பத்திரிகைக்கு நிதி உதவி செய்ய விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 416-724-6240**

---

*பிறருக்கு ஊழியம் செய்வதற்கே உன் வாழ்வைத் தாங்கு.*
*- சுவாமி சிவானந்தர்*

# சாயி அவதாரமும் பயன்பாடுகளும் - பாகம் 1

சு, சிவதாஸ்
முன்னாள் ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி யாழ்ப்பாணம்

சமயங்கள் பல உள. அவற்றின் பயன்பாடு எவ்வளவு என்பது பற்றி பகுத்தறிவாளர்கள் சிந்திக்கின்றனர். மனித வாழ்க்கையில் எவ்வளவோ அவலங்கள். சுனாமி, பூகம்பம் காட்டுத்தீ போன்ற இயற்கை அழிவுகளும் நவீன விஞ்ஞானத்தால் ஏற்பட்ட குண்டு வீச்சு, கதிரியக்க தொழிற்சுமைகள் போன்றவற்றால் ஏற்படும் தாக்கங்களும் மற்றும் மனிதனுக்கு ஏற்படக்கூடிய நோய்கள், அங்கக் குறைபாடுகள் என்பனவும் மனிதனுக்கு உலக வாழ்க்கை பற்றிய எண்ணங்களை சந்தோஷமாக பார்க்கக்கூடியதாக இல்லை.

சமயமும் சமயவழிபாடுகளும் பாதிப்புக்குள்ளான மக்களை மகிழ்ச்சிப்படுத்துமா? முதலில் பாண் கொடு. பிறகு சமயம் பற்றிப் பேசு என்றார் சுவாமி விவேகானந்தர். 'First bread then religion' என்றார். இந்து சமயத்திலும் புத்த சமயத்திலும் கூடுதலாக 'கர்மா' தத்துவம் முதன்மை வகிக்கிறது. நீ முற்பிறப்புகளிலோ, அல்லது இப்பிறப்பின் முதலிலோ செய்த காரியங்களின் பலனை அனுபவித்தாக வேண்டும் என்று கர்ம தத்துவம் அறைகின்றது.

மேலும், இந்துசமயத்தில் சைவம் என்ற பிரிவில், சைவசித்தாந்தக் கொள்கைகளில், கடவுளானவர் யோனி முகவாய்ப்பட்டு பிறப்பெடுக்கமாட்டார் என்றும், மனிதனுக்கு உதவ, நேரடியாகவே மனிதச் சட்டை தாங்கி வந்து, (மணிவாசகருக்கு தேசிகனாக வந்த வண்ணம்) உதவுவார் என்றும் சொல்லப்படுகின்றது. கடவுளும் ஜீவனும் (பதியும் பசுவும்) அடிப்படையில் ஒன்று என்பதை சைவசித்தாந்தம் ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றது. 'Man is essentially divine' என்ற விவேகானந்தரின் கூற்றை ஏற்றுக்கொள்ள பலர் மறுக்கின்றனர். மனிதன் தனது சிந்தனா சக்திக்கும் அனுபவத்திற்கும் எட்டிய வகையில் கடவுள் அல்லது உயிர் பற்றிய கருத்துக்களை தன்னகத்தே கொண்டிருக்கிறான்.

ஆனால், பெரும்பகுதியான மக்கள், இறைசக்தியை நம்புகிறார்கள், நாடுகிறார்கள், தஞ்சம் என்று அடைகிறார்கள்.

---

*கடவுளைப் புகழ்வதாகிய ஒரு காரியத்திற்கே உனது சொல் வன்மையை உபயோகி. - சுவாமி சிவானந்தர்*

ஆசாபாசங்களுக்கு அகப்படாது அப்பாற் சென்ற மக்களையும் தேடியோடி அலைகிறார்கள். மன நிம்மதி எங்கு கிடைக்குமோ என்று ஓடுகிறார்கள் சிலர். சிலர் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று ஆசாபாசங்களுக்கு அடிமையாகி வாழ்கிறார்கள். மேலும் சமய நாட்டங் கொண்டோரும் தத்தம் சமயமே மேலானது என்றும் மெய் என்றும் நம்பி, மனதிலே பிரிவினையை ஏற்படுத்தி வாழ்கிறார்கள்.

இந்த நிலையிலே, கர்மவிளைவுகளால் அச்சமடைவோரையும் வறுமையால் பாதிக்கப்படுவோர்களையும், நோயினால் அவஸ்தைப்படுவோர்களையும் சமயப்பற்றினால் அலைவோரையும் அருகே வாருங்கள் ஆறுதல் தருகிறேன் என்று அழைக்க வந்த அவதாரமே சாயி அவதாரமாகும். சாயி அவதாரம் என்று சொல்கிறபொழுது இந்தியாவின் மகாராஷ்ரமாநிலத்தில் சீரடி என்ற கிராமத்தில் வாழ்ந்து 1918ஆம் ஆண்டு மறைந்த சீரடி சாயி பாபாவையும் குறிக்கலாம் அல்லது இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் புட்டபர்த்தி என்னும் கிராமத்தில் (Nov 23, 1926 - April 24, 2011) பிறந்து வாழ்ந்த சத்ய சாயிபாபாவையும் குறிக்கலாம். சீரடிசாயிபாபா மிகவும் எளிமையாக வாழ்ந்த காரணத்தால், சீரடி சாயிபாபா தான் சத்ய சாயி பாபாவாக பிறந்தார் என்ற கூற்றை பலர் ஏற்க மறுக்கிறார்கள். சத்யசாயியோ தனது 14 வயதுக்கு முன்னமே இரண்டு பாபாக்களும் ஒருவரே என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார். மக்கள் அதனை நம்பலாம் அல்லது விடலாம். அதனால் எதுவித பாதிப்பும் இல்லை. சத்யசாயி தனது 37வது வயதிலே மீண்டும் ஒருமுறை பிரேம சாயி என்ற அவதாரமாக கர்நாடக மாநிலத்தின் மாண்டியா என்னும் மாவட்டத்தில் தான் பிறப்பார் என்றும் சொல்லியிருக்கிறார். அது நடக்குமோ நடவாதோ அதனால் ஒரு தீங்கும் வரப்போவதில்லை. நமக்கு வேண்டியது எல்லாம் நல்வாழ்வு தான்.

பிறப்பிலே நல்ல சீலர்களாகவும் வாழ்க்கைக்கு தேவையான புறச்சூழல்களோடு பிறக்கும் மக்களுக்கு சாயி அவதாரம் தேவையில்லை. கர்மமப்பிடியால் சிக்குண்டவர்களும் இறைவனை அடையும் வழி புரியவில்லையே என்று நினைப்பவர்களுக்கும் சாயி அவதாரம் தேவைதான். ராம அவதாரம், கிருஷ்ண அவதாரம் போன்றே சாயி அவதாரமும் இப்பூவுலகிலே நிகழ்ந்துள்ளது

---

*வார்த்தைகள் மிகுந்த பலம் பொருந்தியவை அவற்றை யாக்கிரதையாக உபயோகி. - சுவாமி சிவானந்தர்*

என்பதுதான் அடியேன் கண்ட உண்மை. 1978ஆம் ஆண்டு அடியேனுக்கு 26 வயதில் இப்பூவுலகம் கைதூக்கி வணங்குகின்ற சத்யசாயி என்னும் பொன்னுருவை எனது கண்களால் கண்டேன். பாதங்களை தொட்டேன். நான்கு நாட்கள் தரிசனத்துக்குப் பிறகு, ஏதோ ஒரு சக்தி திருவண்ணாமலை ஆலயத்துக்கு அனுப்பியது. திருவண்ணாமலை எப்படி எனக்கு உறவாகியது என்பது தொடர்ந்து வரும் கட்டுரைகளில் வெளியாகும்.

**தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள் சர்வதேச தர்ம பரிபாலன அறக்கட்டளைக்கு வாரி வழங்குங்கள்**

**ஆதீன விலாசம்:**



தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள்
இராமலிங்க வள்ளலார் சர்வதேச தரும பரிபாலன அறக்கட்டளை
மேட்டுக்குப்பம் 807802 (நெய்வேலி வழி கடலூர் மாவட்டம்
ஆதீனத் தொலைபேசி இலக்கம்: 04142-645484
கைத்தொலைபேசி இலக்கம்: 9443359245


**வாகன விபத்தா? அழையுங்கள்**

**MR. P. SINGARAJ**



**MICHAEL TAYLOR**
**A PROFESSIONAL CORPORATION**



NO COMMISSION FOR HOUSEKEEPING!
NO COMMISSION FOR CARE GIVER!
NO COMMISSION FOR ATTENDANT CARE!
NO COMMISSION FOR INCOME REPLACEMENT!

வாகன விபத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடி சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அழைக்கப்பட வேண்டியவர் Mr. P. சிங்கராஜ். இவர் உங்களின் நண்பன்.





HONEST AND FRIENDLY SERVICE
CALL: MR. P. SINGARAJ
416-993-8443
905-471-3058

# சிவனடியார் நிந்தை சிவ நிந்தையே

தொகுப்பு டாக்டர் இ. லம்போதரன்

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

-சுந்தரர் தேவாரம்
(திருத்தொண்டர் தொகை)

பிறரைக் குறை கூறுவதையும் குறைவாகப் பேசுவதையும் தவிர்க்க வேண்டும். இது கொடிய பாவம். இது கடவுளைத் தூசிப்பதாகும். எவராவது பிறரைத் தூசணை செய்தால் அவரை அடித்துத் திருத்தினால்கூட தவறில்லை. ஏனெனில் அந்தக் குணத்தையே ஒழிக்க வேண்டும். (குறிப்பு: சாயி பாபா வன்முறையை ஒரு இடத்திலும் பரிந்துரைத்தாகச் சரித்திரமே இல்லை, இந்த இடத்தைத் தவிர. - சாயிபாபாவின் பஞ்ச இரத்தினச் சொற்பொழிவ் 23 November 1987

சிவனடியாரை நிந்தை செய்து பேசியவர்களின் நாவை அறுத்தவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய சத்தி நாயனார். இவரின் சிவப்பணி மேற்கூறிய சாயிபாபாவின் திருமொழிகளால் ஆழமாகப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

எவரையும் துசீக்கலாகாது. எவரையும் தாக்கிப் பேசக்கூடாது. பிரேமையை உள்ளத்தில் நிரப்புதல் வேண்டும். இதுவே சரியான சாதனை - சாயிபாபாவின் பஞ்ச இரத்தினச் சொற்பொழிவு. 21 November 1987.

பிறரைப்பற்றித் தூசித்தோ, கண்டனம் செய்தோ பேசுவது

---

*அந்தராத்மாவின் குரலுக்கு ஏற்றபடி மனமாகிய ஒலி பரப்பியைப் பொருத்து — சுவாமி சிவானந்தர்*

மிகக்கொடிய பாவச் செயலாகும். இது ஒரு பெரிய நோய் போன்றது. இந்த நோய்க்கு மருந்தே கிடையாது. மிகவும் கொடிய புற்று நோயெனவே இதைக் கருத வேண்டும். பிறரைத் தூசிப்பதனால் நம் அறிவு கெட்டு விடுகிறது. இதனால் நாம் அனேக பிரச்சனைகளையும் பாதிப்புக்களையும் அனுபவிக்கவேண்டி வரும். பர தூஷணையைத் தவிரப் பலாத்தகாரத்தில் ஈடுபடும் எண்ணத்தையும் விட்டு மனதில் தெய்வ சிந்தனையையும் தூய்மையான அன்பையும் வளர்த்துக்கொள்ளுங்கள். இப்படிப்பட்ட உண்மையான அன்புடன் பிறரை நேசித்தால் தெய்வ அனுக்கிரகம் உங்களுக்குத் தானாகவே கிட்டிவிடும். பரஹிம்சை, பரதூஷணை இரண்டையும் கட்டாயமாகத் தவிர்க்கவேண்டும். பிறரை தூசிக்கும்போது நீங்கள் தெய்வத்தையே தூசிப்பதாகும். ஏனெனில் அனைவரும் பரமாத்மாவின் சொரூபங்களே. இதுவே சத்தியமான வாக்கு. ஆகவே பிறரை வெறுப்பதையோ, கண்டனம் செய்வதையோ அடியோடு நிறுத்திவிட வேண்டும். உங்கள் அகங்காரத்தையும் ஆடம்பரத்தையும் பெரிதாகக் கருதியே பிறரை வேறுபாட்டுணர்வுடன் நோக்குகின்றீர்கள். இது மாபெரும் தவறு. - சாயிபாபாவின் பஞ்ச இரத்தினச் சொற்பொழிவு: 21 November 1987.

குருவையுஞ் சிவபத்தரையும் யாது செய்தல் வேண்டும்?

மனிதர் எனக் கருதாது சிவபெருமான் எனக்கருதி மனம் வாக்கு காயம் மூன்றினாலும் சிரத்தையோடு வழிபடல் வேண்டும். பிரதிட்டை செய்து பூசிக்கப்படும் சிவலிங்கத்தைச் சிலையென்று நினைந்து அவமதிப்பவரும், சிவதீட்சை பெற்று இயன்றமட்டும் விதிப்படி அநுட்டிக்கும் சிவபத்தரை மனிதர் என்று நினைந்தேனும் அவருடைய பூர்வ சாதியை நினைந்தேனும் அவமதிப்பவரும் தப்பாது நரகத்தில் வீழ்வர். - ஆறுமுகநாவலரின் இரண்டாம் சைவ வினாவிடை 336.

சிவனடியாரை வழிபடாது சிவலிங்கத்தை மாத்திரம் வழிபடலாகாதா?

ஒருவன் ஒரு பெண்ணிடத்து அன்புடைமை அவளுடைய

---

*வீணே உண்டு திரியும் அறிவற்ற வாழ்விலும் சாவே மேலானது.*
*- சுவாமி சிவானந்தர்*

சுற்றத்தாரைக்கண்டபொழுது அவனுக்கு உண்டாகும் அன்பினளவு பற்றித் தெளியப்படும். அதுபோல ஒருவன் சிவபெருமானிடத்து அன்புடைமை அவருடைய அடியாரைக் கண்டபொழுது அவனுக்கு உண்டாகும் அன்பினளவு பற்றித் தெளியப்படும். ஆதலினாலே சிவனடியாரிடத்து அன்பு செய்யாது அவமானம் செய்துவிட்டுச் சிவபெருமானிடத்தே அன்புடையவர்போல் ஒழுகுதல் வயிறு வளர்ப்பின் பொருட்டும், இடம்பத்தின் பொருட்டும் நடித்துக்காட்டும் நாடகமாத்திரையே அன்றி வேறில்லை. - ஆறுமுகநாவலரின் இரண்டாம் சைவ வினாவிடை 338.

குருவுக்கும் சிவனடியாருக்கும் செய்யத்தகாத குற்றங்கள் யாவை? கண்டவுடன் இருக்கை விட்டெழாமை அவர் எழும்பொழுது உடன் எழாமை, அவர் திருமுன்னே உயர்ந்த ஆசனத்தில் இருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், சயனித்துக்கொள்ளுதல், வெற்றிலை பாக்குப் புசித்தல், போர்த்துக்கொள்ளுதல், பாதுகையோடு செல்லல், சிரித்தல், வாகனமேறிச்செல்லல், அவராலே தரப்படுவதை ஒரு கையால் வாங்குதல், அவருக்குக்கொடுக்கப்படுவதை ஒரு கையாற் கொடுத்தல், அவருக்குப் புறங்காட்டல், அவர் பேசும்பொழுது பாராமுகம் செய்தல், அவர் கோபிக்கும்பொழுது தாமும் கோபித்தல், அவருடைய ஆசனம், சயனம், வஸ்திரம், குடை, பாதுகை முதலியவைகளைத் தாம் உபயோகித்தல் அவைகளைத் தமது காலினாலே தீண்டல், அவரது திருநாமத்தை மகிமைப் பொருள்படும் அடைமொழியின்றி வாளா சொல்லல், அவரை யாராயினும் நிந்திக்கும்பொழுது காதுகளைப்பொத்திக்கொண்டு அவ்விடத்தினின்று நீங்கிவிடாது கேட்டுக்கொண்டிருத்தல் முதலியவைகளாம். - ஆறுமுகநாவலரின் இரண்டாம் சைவ வினாவிடை 349.

தான் வழிபட்டுவந்த ஆசாரியன் பெரும் பாவங்களைச் செய்வானாயின் அவனை யாது செய்தல் வேண்டும்?

தானே பூசித்து வந்த சிவலிங்கம் அக்கினியாலே பழுதுபடின் அதனை இகழாது மனம் நொந்து கைவிட்டு வேறொரு சிவலிங்கத்தைக் கைக்கொள்வதுபோலத் தான் வழிபட்டுவந்த

---

*கத்தி முனையில் நடப்பதுபோல ஆத்மீக வழியில் செல்வது அவ்வளவு கடினம். - சுவாமி சிவானந்தர்*

ஆசாரியன் சிவநிந்தை சிவத்திரவிய அபகாரம் முதலிய பெரும்பாவங்கள் செய்து கெடுவானாயின் அவனை இகழாது மனம் நொந்து கைவிட்டு வேறோராசாரியனை அடைந்து வழிபடல் வேண்டும்.
- ஆறுமுகநாவலரின் இரண்டாம் சைவ வினாவிடை 354

ஆண்டான் அடியவ ரார்க்கும் விரோதிகள்
ஆண்டான் அடியவர் ஐயமேற் றுண்பவர்
ஆண்டான் அடியாரை வேண்டாது பேசினோர்
தாம்தாம் விழுவது தாழ்நர காகுமே.

- திருமந்திரம் 537

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தம் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றில் மாண்டிடும்
சத்தியம் ஈது சதாநந்தி ஆணையே.

-திருமந்திரம் 532


**வீடு, வியாபாரநிலையம்**
**வாங்க விற்க**

**Kenga Kumaraswamy**
*Sales Representative*
**Cell: 416-318-0171**
*kengak@hotmail.com*



**HomeLife / Future Realty Inc.**, Brokerage*
7 Eastvale Drive, Suit #205
Markham, ON. L3S 4N8
**Bus: 905-201-9977** **Fax: 905-201-9229**
*Independently owned and operated


*நம்பிக்கையை இழப்போர் யாவையும் இழப்பர் என்று அறி*
*- சுவாமி சிவானந்தர்*

மகா விமான கும்பாபிஷேகப் பெருவிழா

# கணபதி தியானம்

சிவப்பிரகாசம் சிறீதரன் - ஈழத்து வழக்குரைஞர்

"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணஞ் சதுர்ப்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வவிக்னோப சாந்தயே"

எங்கும் நிறைந்தவரும், வெண்மையான ஆடை அணிந்தவரும், நிலவு போன்ற ஒளியுள்ளவரும் நான்கு கைகளுள்ளவரும் ஆனந்தம் பொங்கும் முகமண்டலத்தை உடையவரும் ஆகிய கணபதியை எல்லா இடையூறுகளும் விலகுவதற்காகத் தியானம் செய்ய வேண்டும்.

சிரசிலுள்ள அமிருதம் எல்லா நாடிகளிலும் இறங்கிப் பாய்வதாக எண்ணிச் சிரசின் இருபுறமும் முஷ்டிகளால் ஐந்து முறை மெதுவாகக் குட்டிக்கொள்க. தலையில் குட்டிக்கொள்ளுதல் கணபதி ஆராதனையில் விசேடமான அம்சம்.

- ஸ்ரீ வித்தியா

பூதங்களின் நாயகனாகிய பூதவிநாயகன் பூவுலகு பூத்தநாள் காலம் உண்டாகியது முதல் பக்த கோடிகளால் பூசிக்கப்பெற்று வருகின்றார். விநாயகரைத் தொழுத பின்பே எக்கைங்கரியத் தினையும் தொடங்குவது தொன்றுதொட்டு இனறுவரை நின்று நிலவும் நன்மார்க்கமாகும். விநாயகருக்கென்று மட்டுமே கோயில்களுமுண்டு. ஏனைய கோயில்களிலும் விநாயகருக்கு வணக்கம் செய்த பின்பே மற்றைய பிரதான தெய்வங்களுக்கு பூசைகள் நிகழும்.

மகா கணபதி எங்கள் மனத்தினை உறுதிப்படுத்தி முறையான வழிவகைகளை வாழ்வு மலர நல்குவார். முன்னேற்றம் முழுமை பெற முன்னவர் முழுதும் உதவுவார்.

நினைத்த மாத்திரத்திலே அனைத்து வடிவத்திலும் தோன்றி அல்லல் களைந்து அவலவினை அறுத்து ஆவன செய்வார் ஆனைமுகத்து ஆதிதெய்வம்.

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்து எவ்வெவ்விதத்தில் ஊழ்வினை அகற்றி நல்வினை ஆற்ற முடியுமோ அதனைக் கணபதியினை நினைத்த கணமே செய்து முடிக்கலாம்.

மூஷிகவாகனன் மூலாதாரச் சக்கரத்திலும் வீற்றிருப்பார்.

---

*பொதுவாகத் தலைசிறந்த அறிவு எது என்றால் உறுதியாகத் தீர்மானிப்பதுதான். - நெப்போலியன்*

இச்சக்கரம் ஞாபக சக்திகளைக் கொண்டு செலுத்தும். எனவே மூலாதார மூர்த்தி ஆகிய விநாயகனை வணங்கி வர ஞாபக சக்திகள் எங்களுக்கு இணங்கிவரும். நினைக்க நினைக்க அனைத்துத் துறைகளிலும் சித்திகள் தந்திடும் சித்தி விநாயகர் பக்தி நிறைந்த பக்தர்களின் முத்திக்கு வழிவகுப்பார்.

மூலாதாரத்திற்குப் பேராதாரமாக விளங்கும் முன்னவன் விநாயகன். வித்தக விநாயகன் சித்தகத் துறைந்திட வியத்தகு வெற்றிகளை நயத்தொடு அனுபவிப்பர் அன்பர்கள். எனவே "ஞானக் கொழுந்தினைப் புந்தியில் (மனதில்) வைத்து" அடி போற்ற வேண்டும். 'ஓங்காரம் உலக ஆரம்பத்தினைக் குறிக்கும். எத்தொழிலினை ஆரம்பித்தாலும் ஓங்காரப் பிரணவப் பொருளாகிய கணபதியினை ஓம் கணபதி ஓம் என்று உச்சரித்து ஓங்கு பேறெய்தி உலகம் உவப்ப உயர்ந்திடுவர் உலகத்தவர்.

முத்தமிழ் எழுதிய முழுமுதல் சிவனருள் புதல்வன் பிள்ளையாரை தொழுது எழ இயல், இசை, நாடகம் கசடறக் கற்ற சித்திகள் பெற்று மகிழ்வர் மக்கள். எனவே "சித்தி விநாயகச் செம்மலே போற்றி" என்று ஏற்றினர். அன்னையும் பிதாவும் ஆகிய உமாமகேசுவரனை "உலகு எல்லாம்" உவந்தேற்றும் "முன்னறி தெய்வம்" என்ற உயர்ந்த உண்மையினை "சிவசக்தி"யினை வலம் வந்து வணங்கி மாங்கனி பெற்று உலகிற்கு உணர்த்திய உத்தமி பாலன் கணபதியாவர்.

முந்திய பொருள்கட்கெல்லாம் முந்தியவராக, மூலாதாரத்து முன்னவராக, குறி குணம் கடந்த குஞ்சரராக, முக்கனி நுகரும் முதல்வராக விக்கினம் களையும் விநாயகராக விளங்குகின்றார் ஐங்கரப் பெருமான். செல்வம் செழித்தோங்க அல்லல் களையும் செல்வ விநாயகன் சேவடிகளைப் போற்றி மகிழ்வோம் ஏனையோரை மகிழ்விப்போம்.

பிறவிப் பெருங்கடல் நீந்தி இறைவனது திருவடிகளை வழுத்தி முத்தியின்ப இன்னருள் பெறுவது தான் மனிதப் பிறவி எடுத்ததன் பெருநோக்கமாகும். இதற்கு கோயிலுக்குச் சென்று வழிபடுவதும் திருத்தலங்களை ஆதரிப்பதும் வேண்டற்பாலது. சைவ சமயத்தவர் எக்கருமங்களையும் பழம் பிள்ளையாரை உளம் கொண்டு உய்த்து உணர்ந்து ஆரம்பிப்பது வழக்கம். எனவே இம்மகாகும்பாபிஷேகம் மகாகால நிகழ்ச்சிக் காலத்தில் சகல

---

*வார்த்தையில் மட்டும் பணிவிருந்தால் போதாது. நடத்தையிலும் இருக்க வேண்டும். - ஓர் அறிஞர்*

பாக்கியங்களையும் நமது கனடா நாட்டு இந்து சமயத்தவர்க்கும் ஏனையோருக்கும் அருள வேண்டி வேழமுகத்து விநாயகனை முதலிலே வாழ்த்தி வணங்கி ஆரம்பிப்போமாக!

'வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

- ஔவையார்

**(மல்லாகம் பழம் பிள்ளையார் கும்பாபிஷேகத்தின் பொழுது எழுதிய கட்டுரை)**

---

*கண்டுபிடிப்பாளன், ஆராய்ச்சியாளன், சிந்தனையாளன், இவர்களைப் பொறுத்தே இந்த உலகத்தின் முன்னேற்றம் இருக்கிறது - இங்கேசால்*

*உண்மையான அன்பை பேச்சின் மூலம் வெளிப்படுத்த முடியாது. நமது சேவைதான் அதை வெளிப்படுத்தும்.*

*- காந்தி அடிகள்*


**A Level U Truck Driving School**

**Training Available 9, 13, 15, & 18 Speed**

**Specialized in A & Z B & D Available**

- A & Z License Guaranteed
- Unlimited Lesson
- Unlimited Road Test
- Air Brake Classes
- & Dock Backing

**Unemployee Welcome**
**JOB TRAINING**
**Call for details**

Class G, G1 & G2
Call: 416-587-7746

**Every Student trains Individually**

**வாரத்தில் 7 நாட்களும் பயிற்சி அளிக்கப்படும்**

**For Appoinment Call: S. R. Thurai or Raja**
Certified Instructor / Ministry Approved Instructor
**416-428-5221 647-409-5221**
160 Birchmount Road, Unit 1B, Scarborough, ON. M1P 2B8

## இந்து சமயப்பேரவைச் செய்திகள்



**சிவயோக சுவாமிகளின் வருடாந்தக் குருபூசை**

12-04-2011 செவ்வாய்க்கிழமை பேரவையின் திருக்கூட்டத்தினரால் சிவயோகசுவாமிகளின் வருடாந்தக் குருபூசை ஆத்மஜோதி இல்லத்தில் சிறப்பாக நடைபெற்றது. பல திருக்கூட்டத்தினர் குருபூசையில் பக்தி சிரத்தையுடன் கலந்து கொண்டு சுவாமிகளின் ஆசிகளைப் பெற்றனர்.

**பன்னிரண்டாவது வருடமாக சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை முற்றோதல்**

கடந்த 12 வருட காலமாக சிவயோக சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு நற்சிந்தனையை பக்தி சிரத்தையுடன் முற்றோதுவதை பேரவையின் திருக்கூட்டத்தினர் செயற்படுத்தி வருகின்றனர். காலை 7 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை நற்சிந்தனையை ஈடுபாட்டுடன் திருக்கூட்டத்தினரும் சிவயோக சுவாமிகளின் பக்தர்களும் ஓதுவது வழக்கம்.

கடந்த 12 வருடகாலமாக கனடா கந்தசுவாமி கோயில், நாகபூஷணி அம்மன் ஆலயம் (Finch/Tapscott) நல்லூர் முருகன் ஆலயம், பத்திரகாளி அம்மன் ஆலயம் போன்ற ஆலயங்களில் எல்லாம் வல்ல சிவபெருமானுக்கு அபிஷேக ஆராதனைகளுடன் முற்றோதப்பட்டது.

14-04-2011 சனிக்கிழமை பேரவையின் ஆத்மீக நிலையமாகிய ஆத்மஜோதி இல்லத்தில் திருக்கூட்டத்தினரால் முற்றோதப்பட்டு சிவபூசை செய்து வழிபாடு இயற்றபபெற்றது. சிவயோக சுவாமிகளின் திருஉருவப்படத்திற்கு மலர் சாத்தி ஒவ்வொரு திருக்கூட்டத்தினராலும் சிவயோக சுவாமிகளின் பூங்கழல்கள் போற்றி எனச் சொல்லிச் சொல்லி வழிபாடு செய்யப்பெற்றது. தொடர்ந்து நற்சிந்தனை முற்றோதலைச் செய்து இரவு 9 மணிக்கு பூர்த்தி செய்யப்பெற்றது.

**சித்திரா பூரணை விரத வழிபாடு**

17-04-2011 ஞாயிற்றுக்கிழமை சித்திரா பூரணையை

---

*பண்புடனும் மரியாதையுடனும் இருப்பவன் உலகில் எதையும் சாதித்துவிடுவான். - ஆன்றோர் வாக்கு.*

முன்னிட்டு ஆத்மஜோதி இல்லத்தில் சித்திரபுத்திர நாயனார் கதை படித்தும் திருமுறைப் பஜனை நடத்தியும் சித்திரைக்கஞ்சி காய்ச்சியும் வயிரவருக்கு மடை வைத்தும் வழிபாடு செய்யப்பெற்றது.

**நடேசர் அபிஷேகத்தை முன்னிட்டு திருவாசக முற்றோதல்**



25-04-2011 திங்கட்கிழமை நடேசர் அபிஷேகத்தை முன்னிட்டு திருவாசகமுற்றோதல் நடத்தப்பெற்றது. ஆத்மஜோதி இல்லத்தில் வீற்றிருக்கும் நடராஜப் பெருமானுக்கு பக்தி சிரத்தை யுடன் அபிஷேக ஆராதனையும் செய்யப்பெற்றது.

**திருநாவுக்கரசு சுவாமிகளின் குருபூசை**



27-04-2011 புதன்கிழமை திருநாவுக்கரசு சுவாமிகளின் வருடாந்தக் குருபூசை அவர் இறைவனின் திருவடி அடைந்த சதயநட்சத்திரத்தில் நடத்தப்பெற்றது. காலை 8:30 மணி தொடக்கம் மாலை 4:00 மணிவரை நடத்தப்பெற்ற வழிபாட்டில் அப்பர் சுவாமிகளின் 4ஆம், 5ஆம், 6ஆம் திருமுறைகளில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பாடல்கள் ஓதப்பெற்றன.

பேரவையின் தாபகரும் பேரவையின் குருமுதல்வரும் ஆகிய ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்ததும் சதய நட்சத்திரத்தில் ஆகையால் மாதாந்தம் அவரின் நினைவாக நடத்தப்படும் சதயத்திதி வழிபாடும் பக்தி சிரத்தையுடன் நடத்தப்பெற்றது. கடந்த 12 வருடமாக பன்னிரு திருமுறைகளை முற்றோதும் திருக்கூட்டத்தினர் மிகுந்த அன்புடனும் பக்தியுடனும் விசுவாசத்துடனும் கலந்து சிறப்பித்தனர்.

அப்பர் சுவாமிகளின் அனுக்கிரகத்தையும் குருமுதல்வர் ஆத்மஜோதியாரின் ஆசிகளையும் பெற்றோம் எனத் திருக்கூட்டத்தினர் மகிழ்ச்சியடைந்தனர்.

**சேக்கிழார் குருபூசையும் சிவயோக சுவாமிகளின் மாதாந்த ஆயிலியமும்**

05-06-2011 ஞாயிற்றுக்கிழமை சேக்கிழார் குருபூசை

---

*தாங்கமுடியாத அளவிற்கு நமக்கு ஒருபோதும் துன்பங்கள் வருவதில்லை. - நைஜீரியப் பழமொழி*

திருக்கூட்டத்தினரால் பக்தியுடன் நடத்தப்பெற்றது. சேக்கிழாரின் பெரியபுராணத்தில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பாடல்கள் ஓதப்பெற்றன.

சிவயோக சுவாமிகளின் மாதாந்த ஆயிலியம் அன்றைய தினமாகையால் அவரின் நற்சிந்தனைப் பாடல்களைப் படித்தும், சிவபுராணம் ஓதியும் சேக்கிழார் பெருமான், சிவயோகசுவாமிகளின் திருஉருவப்படங்களுக்கு மலர் வணக்கம் செலுத்தியும் வழிபாடு செய்யப்பெற்றது.

### திருஞானசம்பந்தர் குருபூசை



19-05-2011 வியாழக்கிழமை திருஞானசம்பந்தர் குருபூசை சிறப்பாக நடத்தப்பெற்று ஞானசம்பந்தப் பெருமானின் 1ஆம், 2ஆம், 3ஆம் திருமுறைகளிலிருந்து பாடல்கள் பக்தியுடன் ஓதப்பெற்றன. பல திருக்கூட்டத்தினர் பக்தியுடன் திருஞானசம்பந்தப் பெருமானின் திருஉருவப்படத்திற்கு "திருஞானசம்பந்தப் பெருமானின் பூங்கழல்கள் போற்றி" என கோசமிட்டுக்கொண்டு மலர் வணக்கம் செலுத்தினர்.

### பிரதோஷ வழிபாடு



மாதந்தோறும் பிரதிப்பிரதோஷ காலங்களில் திருவாசகம் முற்றோதி சிவபூசை செய்து திருக்கூட்டத்தினர் வழிபாடு இயற்றுகின்றனர். பல வருடங்களாக நடத்தப்பட்டுவரும் இவ்வழிபாட்டில் திருக்கூட்டத்தினர் சிலருக்கு மிகவும் ஈடுபாடு உண்டு. உடல் சுகவீனமுற்றிருந்தாலும் பல சிரமங்களுக்கு மத்தியிலும் ஆர்வமுடன் பங்குபற்றிப் பயன் பெறுகின்றனர். எல்லாம் வல்ல சிவபெருமானின் அளப்பரிய திருக்கடாட்சத்தை பிரதோஷ வழிபாட்டில் பெறலாம் என்பது எங்கள் திருக்கூட்டத்தினரின் அனுபவ வார்த்தையாகும்.

### ஆதி நடேசர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல்

மாதந்தோறும் இரண்டாவது வெள்ளிக்கிழமைகளில் ஆதிசிவன் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதி திருக்கூட்டத்தினர்

---

*குழந்தையின் ஏன் என்ற கேள்வி பகுத்தறிவுச் சிந்தனையின் திறவுகோல்.*
*- இத்தாலியப் பழமொழி*

வழிபாடு ஆற்றுகின்றனர்.

**இந்துசமயப் பேரவைப் பொருளாளர் திரு.செ. சோமசுந்தரம் அவர்களின் 80வது பிறந்தநாள் விழா**



பேரவையின் தாபக உறுப்பினர்களில் ஒருவரான பெரியார் திரு. செ. சோமசுந்தரம் ஆசிரியர் அவர்களின் பிறந்தநாள் விழாவை பேரவையின் திருக்கூட்டத்தினரும் நிர்வாகிகளும் மிகவும் ஈடுபாட்டுடன் ஆத்மஜோதி இல்லத்தில் கொண்டாடினர்.

20-06-2011 புதன்கிழமை பெரியாரின் பிறந்த நாளை முன்னிட்டு திருவாசகம் முற்றோதியும் சிவபூசை செய்தும் வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. பஞ்சாட்சர மந்திரத்தை 108 முறை பக்தியுடன் சொல்ல பிறந்தநாள் விழா நாயகரின் கையினால் சிவபெருமானுக்கு மலர் சாத்தப்பெற்றது.



---

*ஒருநாள் கவலை ஒருமாத மகிழ்ச்சியைவிட நீளமானது.*

*- ஓர் அறிஞர்*

# அருள் அதிசயம்! அற்புதம்!
# கந்தசஷ்டித் திருநாளில் வெண்மயிலின் வரவு

சுவிஸ் நாட்டிலே செங்காலன் மாநிலத்திலே றைன் நதிக்கரையினிலே மலையும் மலை சார்ந்து விளங்கும் அழகிய சென்மார்க்கிரெத்தன் பதியில் கோயில் கொண்டு வேண்டுவோர் வேண்டுவதை வழங்கி அடியார்களுக்கு பல அற்புதங்களைக் காட்டி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கந்தசஷ்டித் திருநாளில் காட்டிய அற்புதம் இது.

ஆழ்ந்த இறை நம்பிக்கை உடையவர்கள் இவ்விடயத்தை ஆன்மீகத்திற்கு உட்படுத்திப் பார்ப்பார்கள். இந்நிகழ்வு சாதாரணமாக நடப்பதைப் போன்றும் எடுத்துக் கொள்ள முடியாது. சுவிஸ் தமிழர்கள் மத்தியில் பரபரப்பையும் இறையுணர்வையும் ஏற்படுத்திய அந்நிகழ்வு 07-11-2010 அன்று ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்தது. இறெயின்தாளர் தமிழ் இளைஞர்கள் விளையாட்டு மைதானத்தில் மாலைநேரம் கரப்பந்தாட்டம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது எங்கிருந்தோ வெண்மயில் ஒன்று பாதுகாப்புத்தேடி பறந்து வந்து அவர்களிடம் அடைக்கலமானது. பூனை ஒன்று துரத்தி வந்ததாக அங்கிருந்து கிடைக்கப்பெறும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதையடுத்து அங்கிருந்தவர்கள் சென்மார்க்கிரெத்தன் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலய நிர்வாகத்தினருக்குத் தெரியப்படுத்தினார்கள். அத்தோடு முறையாக சுவிஸ் செங்காலன் மாநில காவல்துறையினருக்கு தகவல் கூறப்பட்டது.

தலத்திற்கு விரைந்த காவல்துறையினர் வெண்மயிலை கையகப்படுத்தி வளர்ப்புப் பிராணிகளுக்கான அடையாளக் குறியீடு கால்களில் பொருத்தப்பட்டுள்ளதா எனச் சோதித்ததில் அவைகள் காணப்படவில்லை. அதையடுத்து ஆலய நிர்வாகத்தினர் தமிழர்களின் அனுஸ்டான நாள், கந்தசஷ்டி இரண்டாவது நாள் மயில் முருகனுடைய வாகனம் எனவும் அது இறைவனுக்கு உரியது எனவும் கூறி காவல்துறையினருக்கு விளக்கியபோது அவர்கள் அவ்வெண்மயிலை கோயிலில் வைத்து வளர்ப்பதற்கு

---

*பிறரை வெறுக்கும்போது நம்மனம் அசுத்தமடைகிறது.*
*- ஓர் அறிஞர்*

அனுமதி கொடுத்தனர். யாராவது உரிமை கோரினால் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்வதாகக் கூறினார்கள். இதுவரை யாரும் உரிமை கோரவில்லை.

அந்த மயில் தற்போது பாதுகாப்பாக ஆலயத்தில் வளர்க்கப்பட்டு வருகிறது. வசந்தமண்டப பூசை நடைபெறும்போது இம்மயிலுக்கும் தீபாராதனை நடைபெறுகிறது.

கந்தசஷ்டி காலம் கந்தக்கடவுளுக்கு உரிய காலம். மயிலை வாகனமாக ஏற்ற காலமும் இதுவே. அன்றைய தினம் கதிர்வேலாயுதசுவாமி வெண்ணீற்றுடன் விபூதிக் காப்பு சாத்தப்பட்டு வெண்ணிற அலங்காரத்துடன் இருந்தவேளை வெண்மயிலின் வரவு மிகவும் பொருத்தமாகவும் சென்மார்க்கிரெத்தன் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்திற்குப் புதுப்பொலிவையும் நம்பிக்கையையும் உள்ளாக்கியுள்ளது.

பிந்திய செய்தி: 11-11-2010 அன்று இது போன்ற ஒரு மயில் அதே இடத்தில் வந்து இறங்கியதாகவும் அதனை சுவிஸ் மக்கள் கண்டு காவல்துறையினருக்குத் தகவல் கொடுத்து தங்கள் கையகபப்டுத்தி Eichberg என்னும் கிராமத்தில் உள்ள சிறுவர் மிருகக் காட்சிச்சாலைக்கு கொடுத்ததாகவும் மயில் எங்கிருந்து வந்தது யாருடையது என்பதை காவல்துறையினர் விசாரித்து வருவதாகவும் Rheintaler எனும் பத்திரிகையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தச் செய்தி தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சுவிஸ் மக்களிடையேயும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்மார்க்கிரெத்தன
அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயம்
சுவிஸ்

---

46ஆம் பக்கத் தொடர்ச்சி

சுருதிலய இசைக்கலலூரி அதிபர் இசைக்கலைமணி, இசைக்கலா வித்தகர் திருமதி. மகேஸ்வரி கார்த்திகேசு அவர்களின் நெறிப்படுத்தலில் பொழிந்த முதல் இசை மழை இராக சங்கமம் - 2011 ஒரு வெற்றி விழாவாக அமைந்திருந்தது. இவ்வெற்றிக்கு ஆசிரியையின் ஊக்கம், விடாமுயற்சி, தன்னடக்கம், மற்றவர்களை மதிக்கும் பண்பாடு என்பன உறுதுணையாக இருந்தன என்றால் மிகையாகாது. இவ்விழாவின் வெற்றிக்கு உழைத்த அதிபர், கலைஞர்கள் மாணவர்கள், பெற்றோர்கள் பாராட்டுக்குரியவர்களே!

**Book Review:**

# YOGASWAMY AND GURU PARAMPARAI IN JAFFNA .

Mr. Ratnapragasam's book on 'Yogaswamy and Guru Paramparai in Jaffna' has fulfilled a long-felt need of the Tamil diaspora, especially the younger generation, who are ignorant of their mother tongue-Tamil.

Mr. Pragasam has written this book in English, with great forethought, to enable the youth to read, understand and appreciate, the intricate details of the Kailasa Paramparai of Lord Siva, who held the truth in their palms.

Though there were so many other Guru paramparai in our Hindu religion, Mr. Pragasam has chosen this particular one for the simple reason. Yogaswamy was a great sage of the recent times, who has touched and transformed the lives of many in our homeland and abroad, who are Hindus, Christians, Muslims and Buddhists. If not for him, we cannot boast ourselves as Hindus to-day.

Mr. Pragasam has done an in-depth study of these gurus, and has aptly presented, in easy reading English, their divine life stories and mission. They knew the past, present and future of the Tamils - Hindus in particular.

Yogaswami instructed his disciples, especially the American born Sivayasubramuniya swamigal, to safeguard and spread Hinduism, world-wide, and to build temples.

After his demise(maha-samadhi), the good work continues under the spitirual guidance of his disciple - Bodhinatha Veylanswamigal - the 164th Jagadcharya of the Nandinatha Sampradaya.

"Hinduism Today", a well renown religious quarterly magazine, published world-wide by the Kuaai Aadheenam in Hawaii, is aimed at helping the youth, in understanding and appreciating, our Hindu religious values, and practice them in their day-today life.

The author has made a thorough study of Yogaswamy's 'Natchinthanai' poems, and has quoted a number of valuable

stanzas from them, and given them the real meaning in Tamil, for clarity. Infact, after reading his book, we have gathered a clear vision of their teachings.

'Yogaswami and his guru paramparai period' should be regarded as a "Golden era", in the history of Sri Lanka, as there was complete peace and harmony in the country; as well as political stability, unity, better understanding and cordial relationship, amongst the various communities.

Now the situation has changed (for the worse) and we are compelled to pray and yearn, for a come-back of this holy guru paramparai, to re-establish peace and order, in the country.

This book is a must-read for the youth, and the elderly should read it first to impress as to why it is important for the future generation, to understand and appreciate the great teachings of these siddhars, and follow them, to lead a virtuous and meaningful life. We are now living in an age of Kali yuga, and undergoing untold hardship both mentally and physically, and are bound to go astray and perish, unless some sort of divine intervention comes in. Though Mr. Pragasam has met Yogaswamy only once, he has to be admired, for his foresight and keen interest, spending a great length of time, in investigative studies, to compile such vast information and present it with a collection of pictures, in clear print, as a handy-sized book, thus enabling the reader, to take it along and read as time permits, unlike other lengthy write-ups, that we normally come across.

I thank Mr. Pragasam for giving us a family tree of t his guru paramparai in the final section, of the book, for our reference. We look forward to seeing more writings from him, to enlighten and encourage our younger generation, regarding our rich, religious heritage.

We pray to Yogaswami and his guru paramparai, for their spiritual guidance and blessings.

OM Nama Sivaya.

Meena Thavaratnam
Toronto

# திருத்தல யாத்திரை 2010 தொடர்

சிவ முத்துலிங்கம்

கடந்த இதழ் தொடர்ச்சி

நான்காவது முறையாக இந்துசமயப் பேரவையின் திருக்கூட்டத்தினர் திருத்தல யாத்திரையை 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 5ஆம்திகதி மேற்கொண்டனர். இந்திய திருத்தல யாத்திரையில் இரண்டாவது முறையாக பன்னிரு திருமுறை களையும் முற்றோதினர். கடந்த இதழில் முதல் மூன்று திருமுறை களையும் முற்றோதிய விபரங்கள் உள்ளடக்கப் பட்டிருந்தன. தற்பொழுது நான்காம், ஐந்தாம் ஆறாம் திருமுறைகளை முற்றோதிய விபரங்களை எழுத முனைகின்றேன்.

நான்காம் ஐந்தாம் ஆறாம் திருமுறைகள் அப்பர் சுவாமிகள் என அழைக்கப்படும் திருநாவுக்கரசு நாயனார் பாடிய பாடல்களாகும். நான்காம் திருமுறையை முற்றோதுவதற்காக பேரவையின் திருக்கூட்டத்தினராகிய நாம் உதவியாளர்களுடன் எங்கள் வாகனத்தில் விரைந்தோம். வழமையாக திருவண்ணாமலை தரிசனம் எங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும். அண்ணாமலையான் நினைக்க முத்தி தரும் கடவுள் என்பதனாலும் உண்ணாமுலை அம்மன் சகித அண்ணாமலைப் பெருமானை உள்ளன்போடு வணங்குபவர்களின் வினைகளை நீக்கும் ஆற்றல் எம்பெருமானுக் குண்டு என்பதனால் ஆகும்.

பஞ்சபூதத் தலங்களிலே தீத்தலமாக காட்சி அளிக்கும் எம்பெருமான் பக்தர்களின் வினைகளைப் பொசுக்கி விடுவார். திருவண்ணாமலை தரிசனம் என்றாலே முதற்கண் எங்கள் மனதில் உதிப்பது கிரிவலமாகும். ஆனால் திருமுறைகளைப் படித்து முடிப்பது பாரிய ஆத்மீக கடமையாதலால் நான்காம் திருமுறையை 14-12-2010 செவ்வாய்க்கிழமை முற்றோதினோம். அன்றைய தினம் நான்காம் திருமுறையை பூர்த்தி செய்ய முடியவில்லை. மறுநாள் 15-12-2010 புதன்கிழமை கிரிவலம் வருவதற்குத் தயாரானோம். பதின்நான்கு கிலோ மீற்றர்களைச் சுற்றிக் கிரிவலம் வருவதென்றால் கனடா வாழ் மக்களாகிய எங்களுக்கு அவ்வளவு சுலபமான விடயமல்ல.

பக்திவைராக்கியத்துடன் எங்கள் கிரிவலத்தைத்

---

*தனக்கு மட்டும் நல்லவனாக இருப்பவன் எதற்கும் பயன்படமாட்டான். - ஓர் அறிஞன்.*



**இந்து சமயப் பேரவை உறுப்பினரும் தொண்டருமாகிய திரு. வடிவேலு உமாகாந்தன் அவர்களின் பிறந்த நாள் விழாவை பூலோக கைலாயம் என அழைக்கப்படும் சிதம்பரம் புண்ணிய நாச்சியார் மடத்தில் கொண்டாடும் பொழுது.**

தொடர்ந்தோம். கிரிவலப்பாதையிலே திருவண்ணாமலையின் பிரபல ஞான தபோதனர்களாகிய சேஷாஸ்திரி சுவாமிகள், ரமண பகவான், யோகி ராம்சுரத்குமார் ஆகியோரின் ஆச்சிரமங்கள் அமைந்திருக் கின்றன. நாம் வழமையாக கிரிவலம் வரும்பொழுது மேற்கூறப்பட்ட ஆச்சிரமங்களைத் தரிசிக்கத் தவறுவதில்லை. மகாஞானிகளாகிய இம்மூவருடைய ஆச்சிரமங்களில் இன்றும் ஆத்மீக ஒளிவீசிக் கொண்டிருப்பதை நாம் கண்கூடாகக் கண்டு உணர்ந்தோம். ஒவ்வொரு ஆச்சிரமத்திலும் ஒவ்வொரு அனுபவத்தைப் பெற்றோம்.

அண்மையிலே சமாதியடைந்த யோகிராம் சுரத்குமாரின் ஆச்சிரமத்திலே தியானத்தில் இருந்த அடியேனுக்கு தியான நிலையை விட்டு எழும்ப முடியாத நிலை ஏற்பட்டது. மகான் யோகிராம் சுரத்குமாரின் பரிபூரண அன்பை என்னால் உணரமுடிந்தது. அடியேனும் அன்பர் உமாகாந்தன் அவர்களும் கிரிவலம் வரும்போது யோகிராம் சுரத்குமார் அவர்கள் வாழ்ந்த

*மனச்சாட்சியை உறுத்தாத சந்தோசங்களே நிலைத்திருக்கும் இன்பங்கள்.* — *டாக்டர் இராதாகிருஷ்ணன்.*

இல்லத்திற்குச் சென்றிருந்தோம். அவர் வாழ்ந்த இல்லத்தில் அவர் பாவித்த பொருட்கள், நூல்கள் போன்றனவற்றைப் பார்வைக்கு வைத்துள்ளார்கள். அவருடைய திருஉருவச்சிலையையும் படத்தையும் வைத்து விளக்கேற்றியிருக்கின்றார்கள். அவற்றைப் பாதுகாப்பதற்கு ஒரு காவலாளியும் உள்ளார்.

இல்லத்திற்கு முன்பாக ஒரு நெல்லிமரம் உள்ளது. நெல்லிமரத்தை நோக்கியவாறே யோகி அவர்கள் நாமஜெபம் செய்து கொண்டிருப்பார் என இல்லக்காவலாளி கூறினார். அந்த நெல்லி மரத்திலே நெல்லிக்கனிகள் காய்த்துத் தொங்கின. மகாயோகியான யோகிராம் சுரத்குமாரின் அருட்பார்வைக்கு ஆட்பட்ட நெல்லிமரத்தில் இருந்து சில நெல்லிக்கனிகள் எங்களுக்குக் கிடைக்காதோ என நாமிருவரும் எண்ணினோம். நாம் எண்ணிய எண்ணத்தை காவலாளியின் மனத்தில் உணரவைத்த யோகியார் அவர்களின் சூட்சும சக்தி எங்களுக்கு நெல்லிக்கனியைத் தருவித்தது.

தொடர்ந்து நாம் கிரிவலம் வரும்பொழுது எங்கள் திருக்கூட்ட அடியவர்களில் பலர் முதியவர்களாகையால் அவர்கள் தொடர்ந்து நடக்கமுடியாமல் எங்கள் வண்டியில் ஏறிக் கிரிவலம் வந்து இருப்பிடத்திற்குத் திரும்பினர். நாம் ஒரு சிலர் வெவ்வேறாக தொடர்ந்து நடந்து கிரிவலம் வந்தோம். அடியேனும் அன்பர் உமாகாந்தன் அவர்களும் தொடர்ந்து கிரிவலம் வரும்பொழுது நாய் ஒன்று எங்களைத் தொடர்ந்து வந்தது. கிரிவலப்பாதையிலே வீற்றிருந்த சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் நாம் தானம் அளித்துக் கொண்டு தொடர்ந்தும் கிரிவலம் வந்து கொண்டிருந்தோம்.

கிரிவலப்பாதையில் ஒரு இடத்தில் காவிஉடை உடுத்த பல சாதுக்கள் வீற்றிருந்தனர். நாம் சில்லறைக் காசுகளை எடுத்து ஒவ்வொருவருக்கும் தானம் அளித்துக் கொண்டிருந்தோம். இரு கரங்களையும் நீட்டி எங்கள் தானங்களை சாதுக்கள் பெற்றனர்.அவர்களில் ஒரு சாது, ஆகாயத்தைப் பார்த்தபடி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார். அவரை உற்றுப்பார்த்த அடியேன் அவர் இறைசக்தி மிகுந்த சாது என உணர்ந்து கொண்டேன். அவருடைய பாதங்களைத் தொட்டு ஆசிகள் பெற முனையும்போது தன் கையைத் தூக்கி எங்களை ஆசீர்வதித்தார். அடியேன் சுவாமிகள் நீங்கள் எந்த ஊர் என்று கேட்டேன். அவர் கையை அசைத்துத்

---

*குற்றம் செய்யக் காரணங்கள் தேவையில்லை. சந்தர்ப்பம் போதும்.* *- ஓர் அறிஞர்*



**2011 ஜனவரி 4ஆம் திகதி முதுபெரும் புலவர், திருமுறைக் கலைஞர் திரு.ச. சுந்தரேசம்பிள்ளை அவர்கள் நந்திகொடியேற்றி விழாவை ஆரம்பித்து வைக்கிறார்**

தனக்குத் தெரியாது என்று கூறினார். அவரிடம் சில சில்லறைகளை நாம் கொடுக்க முனையும்பொழுது வாங்க மறுத்துவிட்டார். அவரின் திருவடியில் நாம் கொடுக்க முனைந்த சில்லறைகளை வைத்துவிட்டு எங்கள் கிரிவலத்தைத் தொடர்ந்தோம்.

முதல்நாள் அடியேன் மிகவும் நோயுற்றிருந்தும் கிரிவலத்தைப் பூர்த்தி செய்யாமல் திருவண்ணாமலையை விட்டுத்திரும்பக் கூடாதென்ற மனஉறுதியுடன் அண்ணாமலை யானை நினைந்து வேண்டிக்கொண்டு கிரிவலத்தைத் தொடர்ந்திருந்தேன். கிரிவலத்தில் எங்களுடன் அந்த நாயும் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தது. பலமைல் தூரம் எங்களைத் தொடர்ந்து வந்த நாயை நாம் அதிசயமாகப் பார்த்தோம். இது சாதாரண நாயல்ல என்பதை நான் உணர்ந்தேன். சூக்கும நிலையில் ஜீவன் முக்தியடைந்த சித்தர்கள், ஞானிகள் கிரிவலம் வருவதாக நான் அறிந்துள்ளேன். சூக்கும நிலையில் ஞான தபோதனர்களின் கிரிவலம் நடைபெறுவதால் பாதணி அணிந்துகொண்டு கிரிவலம் செல்லக்கூடாது என்பது ஒருவிதி.

---

*கண்ணியமானவர் மீது தவறாகக் குற்றம் சாட்டுவதும் ஒருவகைக் கொலைதான்.* — *ஓர் அறிஞர்*

எல்லாச் சாதுக்களுக்கும் ஏழைகளுக்கும் சில்லறைத் தானம் செய்துகொண்டு வரும் இவர்கள் ஒரு மிருகமாகிய நாய்க்கு என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பதற்கு ஜீவன் முக்தியடைந்த சித்தர் ஒருவர்தான் நாய் உருவில் வருகின்றார் என அடியேன் உணர்ந்தேன்.

அந்த நாயிலே ஒரு பிரகாசம் தென்பட்டதை உணரக் கூடியதாகவிருந்தது. நாம் எமது கைப்பையில் வைத்திருந்த பாண் பார்சலை எடுத்து நாய்க்குப் போடுமாறு அன்பர் உமாகாந்தனுக்குப் பணித்தேன். அந்தப் பாண் பார்சல் முடியும் வரை அன்பர் அவர்கள் நாய்க்குப்போட்டுக் கொண்டேயிருந்தார். ஆவலுடன் உண்ட அந்த ஜீவன் மிக மகிழ்ச்சியுடன் எங்களுக்கு வரவுசொல்லியபடி கிரிவலப்பாதையிலே இருக்கும் அட்டலிங்கங்களில் ஒன்றான ஒரு ஆலயவளாகத்துள் சென்று மறைந்துவிட்டது. அந்த ஜீவனை உற்றுநோக்கியபடி இருந்த எமக்குப் பெரும் அதிசயமாகவிருந்தது. எங்கள் கிரிவலம் தொடர்ந்தது.

- தொடரும்


## வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க

அன்பானவர்களே,
உங்கள் வாழ்வின் அதியுயர் முதலீட்டை செவ்வனே செய்திட, உங்கள் சுமையை என் சுமையாகக் கருதி அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் செயற்படும் என்னை இன்றே அழையுங்கள்

***Guidance provided in related services include:***
***Mortgage, Inspection, Legal, Insurance.***



**Ratheesh Subramaniam**, B.Sc (Hons)
Sales Representative

Direct: **416.303.4005**
Bus: **416.321.6969**
Fax: **416.321.6963**
Email: ratheesh_maniam@hotmail.com

**Homelife/GTA Realty Inc., Brokerage,**
**1711 McCowan Road, # 206, Toronto, ON. M1S 3Y3**
"Independently Owned and Operated"
*Higher Standards Agents...Higher Results!...*


*சான்றோருக்குரிய ஆற்றல்கள் இரண்டு. ஒன்று பொறுமை மற்றையது கருணை- ஓர் அறிஞர்.*

# வாழ்க்கைத் தத்துவம்

ஆத்மஜோதி நா. முத்தையா

பிறருக்கு உபகாரம் செய்வது புண்ணியம்
பிறருக்குத் தீங்கு நினைப்பதே பாவம்.

பிறருக்கு நன்மைசெய்யா விட்டாலும் பாதகம் இல்லை தீமை செய்யாதிருப்பாயாக. உதவி வேண்டாம், உபத்திரவம் கொடுக்காமல் இரு என்பன போன்ற வாக்கியங்கள் நம்மத்தியில் நிறைய வழக்கில் இருக்கின்றன.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே நமது வாழ்க்கை. பிறப்பு என்ற சொல்லுக்குள்ளேயே இறப்பு என்ற சொல்லும் உள்ளது. பிறப்பு என்ற சொல்லில் முதல் எழுத்தாகிய 'ப்' என்பதை நீக்கிவிட்டால் மிஞ்சுவது இறப்பு. பிறந்த கணம் தொடக்கம் மனிதன் இறந்து கொண்டே இருக்கின்றான். இந்த உண்மையை அறியாதவர்கள் தாம் வாழ்ந்து கொண்டிருப்பதாக எண்ணி ஏமாந்து போகிறார்கள்.

நாம் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கூறும் நூல்கள் ஏராளம். வேதங்கள், புராணங்கள், ஆகமங்கள், இதிகாசங்கள், திருமுறைகள், சாஸ்திரங்கள், நீதிநூல்கள் இவையெல்லாம் நாம் வாழும் வகையையே கூறுகின்றன. நாம் படிக்கிறோம்; படித்தபடி நடப்பதில்லை. பல மகான்கள் வாழ்ந்து காட்டினார்கள். அதையும் பின்பற்றத் தவறிவிட்டோம். காலையில் துயில் எழுவதிலிருந்து இரவு படுக்கப்போகும் வரை ஒவ்வொரு காரியமும் இறைவன் நினைவோடேயே செய்து நம்முன்னோர்கள் பயன்பெற்றார்கள்.

ஒவ்வொருவரும் வாழ்க்கைத் தத்துவத்தை உணர வேண்டும். வாழ்க்கையின் குறிக்கோள் என்ன என்பதையும் அறிந்திருக்க வேண்டும். நாம் விரும்பியோ விரும்பாமலோ மனிதப்பிறப்புக் கிடைத்துவிட்டது. மனிதனாக வாழ்ந்துதான் ஆகவேண்டும். மிருகமாக வாழவேண்டும் என்றாலும் நமக்குச் சுதந்திரம் உண்டு. தேவனாக வாழ நினைத்தாலும் வாழலாம். நமக்கு நமது வாழ்வை அமைத்துக்கொள்ள சர்வசுதந்திரமும்

---

*மற்றவரின் மகிழ்ச்சியில் நமது மகிழ்ச்சியும் இருக்கிறது என்பது ஒரு மகத்தான உண்மை.* - *சான்றோர்வாக்கு*

இருப்பதனாலே வாழ்வுந் தாழ்வும் நமதுகையிலே தானுண்டு.

வாழ்வு சாரமுடையது ; ஆனந்தமயமானது; சுகம் நிறைந்தது. யாருக்கு? வாழத் தெரிந்தவர்களுக்கு.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்”

என்பது வள்ளுவன் வாக்கு. உலகத்தில் மனைவி மக்களோடு இல்லறம் நடத்தி, வாழவேண்டிய முறையில் வாழ்கின்றவன் அதற்கென்று அவன் வேறுமுயற்சி செய்யாமலேயே வானத்திலுள்ள தெய்வத்தோடு சேர்க்கப்படுவான். வாழ்க்கைத் தத்துவத்தை உணர்ந்தவனால் நல்வாழ்வு வாழ முடியும்.

“பகவானே! என்னிடமுள்ள தன்னடக்கமின்மையை நீக்கு. என்மனம் கட்டுப்பட்டிருக்கும்படி செய். இந்திரிய சுகங்களிலிருந்து என்னை விடுதலைசெய். எல்லா ஜீவராசிகளிடத்திலும் அன்பு செலுத்துகிற வண்ணம் என் இதயத்தை விசாலப்படுத்தி, சம்சார சாகரத்தைக் கடக்க எனக்குத் துணை செய்.”

இது ஆதிசங்கரருடைய வேண்டுதலாகும்.

தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மை என்பது பொருள். எமது உண்மைநிலை என்ன என்று அறிந்தால் தான் வாழ்க்கைத் தத்துவத்தை விளங்கிக் கொள்ள முடியும். நாம் இந்த உடல் அல்ல. நாம் இந்த உள்ளம் அல்ல. நாங்கள் ஆத்மாக்கள். இந்த உணர்வுதான் எமது உண்மையான நிலை. சொல்லாற் சொல்லலாம். அது கிளிப்பிள்ளைப் பாடம் போல. நாம் ஆத்மாக்கள் என்பதை உணர்வதற்குப் பல காலம் பல சாதனைகள் செய்ய வேண்டும். உடல் பற்றைவிடும் அளவுக்கு, உடல் தேவையை மறக்கும் அளவுக்கு, உள்ளம் அடங்கும் அளவுக்கு ஆத்ம உணர்வு உண்டாகும்.

இன்று உலகில் நடைபெறும் தீமைகளுக்கெல்லாம் முக்கிய காரணம் ஆத்ம உணர்வின்மையே ஆகும். தன்னை ஆத்மா என்று உணர்ந்து கொண்டவன்தான் ஆண்டவனை அறிய முடியும்.

---

*சும்மா இருப்பது என்பது ஓய்வல்ல.*

*- ஓர் அறிஞர்*

தன்னை அறிந்தவன் தலைவனை அறிவான் என்று சொல்வது இதனையே.

"என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்" என்பதும் இதனையே குறிக்கின்றது.

வாழத்தெரியாதவர்கள் பூவுலகையும் குறைசொல்லுவார்கள். மானிட வாழ்வையும் இழித்துரைப்பார்கள். "பூமியில்போய்ப் பிறவாமையில் நாள் நாம் அவமே போக்குகின்றோம்" என்று தேவர்கள் ஏங்குகின்றார்கள். ஏன் என்றால் இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற இடம். "மனிதப் பிறவியும் வேண்டுவதே" என்பது அப்பர் வாக்கு. "அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது ஒளவை வாக்கு.

இந்த உலகத்தில் கர்மானுஷ்டானம் செய்து நல்லகதி அடையலாம். தேவ உலகத்தில் அது முடியாது. எவ்வளவு புண்ணியம் பண்ணியிருக்கிறோமோ அவ்வளவு காலம் சுவர்க்கத்தில் இருக்கலாம். அதனால் அதற்குப்போக பூமி என்று பெயர். தவம் பண்ணுகிற இடம் பூவுலகமே. அதுவும் மனித ஜன்மத்திற்குத்தான் உண்டு.

நமது ஒவ்வொரு இந்திரியத்திற்கும் இரண்டுவித சக்தியைப் பகவான் கொடுத்திருக்கிறார். கையினால் பூஜை செய்யலாம். அல்லது பிறரை அடிக்கலாம். நாவினால் பகவான் நாமாவைச் சொல்லலாம் அல்லது பிறரைத் திட்டலாம்.

பக்தி செய்ய வேண்டும் என்றாலும், தவம் செய்ய வேண்டும் என்றாலும் அதற்குப் பூலோகமே ஏற்ற இடம். அதனால்தான் தேவர்கள், அம்பிகை எல்லோருமே பூலோகத்திற்கு வரநேரிட்டது. நம்மாழ்வார் "எனக்குப் பரம சுகம் எதற்கு? இங்கேயே பாசுரங்களைப்பாடி ஆனந்தமாக இருந்துவிடுகிறேனே" என்றார். இராமபிரான் அநுமாரை வைகுந்தம் வருமாறு கேட்டபோது அதற்கு அநுமார் அங்கு இராமநாம பஜனை இருக்குமா? என்று கேட்டாராம். இவை எல்லாம் அங்கு கிடைக்காது என்றபோது அத்தகைய பரமபதம் எனக்கு வேண்டாம் என்று அநுமார் மறுத்து விட்டாராம்.

மலைபோன்ற துன்பக் குவியலினூடே கடுகளவு இன்பத்திற்காகவே மனிதன் வாணாளெல்லாம் வீணாளாகின்றது.

---

*திருப்தி நமக்கு இயற்கையாகக் கிடைத்த செல்வம்*

*- சாக்ரடீஸ்*

இன்ப வாழ்விற்குச் சுந்தரர் இலக்கணம் தருகின்றார்.
"இறைகளோடு இசைந்த இன்பம்
இன்பத்தோடு இசைந்த வாழ்வு."

ஒரு மரத்திலுள்ள இலைபோன்றது வாழ்க்கை. மரத்துடன் சம்பந்தம் இருக்கும்வரை இலைக்குப் பசுமையும் பெருமையும் உண்டு. மரத்திலிருந்து பிரிந்து விட்டாலோ காற்றால் அலைப்புண்டு, காலால் மிதியுண்டு, மேட்டிலும் பள்ளத்திலும் உருண்டோடி 'செத்தை' என்று ஒதுக்கப்பட்டு மக்கி மடிகிறது. ஆண்டவன் என்ற மரத்துடன் தொடர்பு இருக்கும்வரை அதற்கு அழகுண்டு. ஆற்றலுண்டு. தொடர்பு நீங்கினால் அழிவுதான்.

வாழ்க்கை என்பது ஒரு நதிபோல ஓடிக்கொண்டிருக்க வேண்டும். தேங்கி நிற்கக்கூடாது. ஓடிக்கொண்டே இருந்தால் பிறருக்குப் பயன் இருக்கும். நீரின் நோக்கம் அது தொடர்ந்து பாய்ந்தோடி கடலைச் சென்று அடைவதே. அதுபோன்று வாழ்க்கை என்பது இறைவன் என்ற கடலை அடைவதை தன் நோக்கமாகக் கொள்ள வேண்டும்.


**VSP. JEWELLRY MART**
**வி. எஸ். பி நகைமாளிகை**
**22K GOLD**

Money Transfer
Fastest way to
transfer money worldwide
**105 Kennedy Road, #10, Brampton, ON.**
**905-451-9778**

**MAG FRAMING & POOJA CENTRE**
அனைத்து விதமான பிரேம் தேவைகளிற்கும்
பூஜைத் திரவியங்களிற்கும் நாடுங்கள்
**48 - 50 Dean St. Brampton, ON. L6W 1M6**
**905-458-4660**
(Also accessible from 105 Kennedy Rd. S)
Kennedy S / Steeles


*இருவருக்கிடையே ஒரு வேலி இருந்தால் நட்பு பசுமையாக விருக்கும். - பிரான்ஸ் பழமொழி*

## கச்சியப்பர் கந்தபுராணம்

# ஒரு தமிழ்நாட்டுக் காப்பியம்

**கலாநிதி க. வைத்தீஸ்வரக் குருக்கள்**

சென்ற இதழ் தொடர்ச்சி

### வள்ளி திருமணம்

இனி களவு மணமாக நடைபெற்ற வள்ளி திருமணத்தைக் கவனிப்போம். வள்ளி திருமணக் கதையைப்போல் தமிழர் மனத்தைக் கொள்ளை கொண்ட வேறொரு கதையைக் காணமுடியாது. முருகப்பெருமானின் அடியவர்களில் தலைசிறந்தவரான அருணகிரிநாதர், முருகப்பெருமானை வள்ளி மணாளனாகக் காண்பதிற் பெருமகிழ்ச்சி கொள்கின்றார். வள்ளிமலையில் தோன்றி அம்மலையரசன் மகளாக வளர்ந்த வள்ளியை ஏனல் (தினைப்புலம்) காக்கும் நேரத்தில் அவளை அடைய, வேடனாகச் சென்ற முருகப் பெருமானின் திருவிளை யாடல்கள் பல்வேறு அகத்துறைகளில் அமைந்திருப்பதால், திருவிளையாடல்களைப் பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கு முருகன் அருள் செய்யும் பல்வேறு உபாயங்களாகக் காணும் அடியவர்களுக்கு அவை பேரின்பத்தைக் கொடுக்கும். வள்ளி திருமணத்தின் உட்கருத்தைப் பின்வருங் கந்தரலங்காரப் பாடல் நன்கு விளக்குகின்றது:

"கின்னங் குறித்தடியேன்செவி நீயன்று கேட்கச் சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கிவிட்டது, கோடு குழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்று கல்யாணம்முயன்றவனே."

கோடு, குழல் போன்ற குறிஞ்சிநில வாத்தியங்கள் ஒலிக்க, குறிஞ்சிநில அரசனான நம்பியின் மகளை, முன்பு குறிஞ்சிநில ஊராகிய வள்ளிமலையில் திருமணஞ்செய்வதற்கு முயற்சிகளைச் செய்தவனே, எனது துன்பம் (கின்னம்) போக்கும்படி என் செவியில் நீ இரகசியம் (குன்னம்) எனக் கூறிய வார்த்தை இப்பொழுது வள்ளிமலையிற் பரகசியமாய் விட்டதே. அடியார் துன்பம் போக்குவதற்கு முருகன் எப்பொழுதும் எளியவனாயிருக்கின்றான்

---

*மேகம் எவ்வளவு பெரிதாகவிருந்தாலும் அது சூரியனை மறைத்து விடமுடியாது - ஒருமகான்.*

என்பதுதான் அவன் உபதேசித்த இரகசியம். இந்த இரகசியமானது முருகன் வள்ளிமலைக்குத் தானாகவே சென்று வள்ளியின் துன்பத்தைப் போக்கி அவளை மணந்ததனால் பரகசியமாகிவிட்டதாம்.

**சமயக் கருத்துக்கள்**

கச்சியப்பர் கூறும் சமயக் கருத்துக்களை ஆராயமுன், முருகன் அவதாரத்தைப் பற்றி ஆராய்தல் அவசியம். இராமாயணம், பாரதம், குமாரசம்பவம் முதலிய நூல்களிற் கந்தன் தோற்றம் பற்றிப் பல கதைகள் காணப்படுகின்றன. அவற்றுக்கெல்லாம் பொதுவாகக் காணப்படுவது, கந்தன் ஆறு கார்த்திகைப் பெண்கள் வயிற்றிற் கருத்தரித்து அவர்கள் பிள்ளைகளாகப் பிறந்தான் என்பதாம். இக்கதையே பின்வருந் திருமுருகாற்றுப்படையின் வரிகளிலுங் காணப்படுகின்றது:

"நெடும் பெரும் இமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறிவர் பயந்த ஆறமர் செல்வ."

முருகனுக்கும் பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவனுக்கும் பேதங் காணவிரும்பாத கச்சியப்பர், அவனைத் தேவ கன்னிகைகளின் யோனி வாய்த்தானும், தோற்றச் செய்ய விரும்பவில்லை. அதனாற்றான், சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து அவனைத் தோற்றுவித்துள்ளார். சிவனே முருகனாகத் தோன்றினான் என்பது பின்வருஞ் செய்யுளிலிருந்து நன்கறியலாம்:

"மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நில மூர்த்தி
அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப்போதில் வீற்றிருந் தருளினானே."

சிவபரத்துவம்-சிவனே முழுமுதற் கடவுள் என்பது இந்நூலிற் கூறப்படுவதுபோல் வேறெங்குங் கூறப்படவில்லை. இதை, ததீசி உத்தரப்படலத்தில் விரிவாகக் காணலாம்.

---

*உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம். - சுவாமி விவேகானந்தர்*

அரிபிரமேந்திராதி தேவர்கள் தங்களுக்கேற்பட்ட துன்பத்தைத் தீர்ப்பதற்குச் சிவபெருமானிடஞ் சென்றதே இதற்குப் போதிய சான்றாகும்.

இனி, இந்நூலிற் கூறப்படுஞ் சமயத் தத்துவங்கள் தமிழ் நாட்டுக்கே சிறப்பாக உரிய சைவசித்தாந்த அடிப்படையிற் கூறப்பட்டுள்ளன. இதைக்காசிப உபதேசப்படலத்திலிருந்து நாம் காணலாம்.

முப்பொருள்-பதி, பசு, பாசம் பற்றிக் காசிபர் கூறுவது பின்வருமாறு:

"சான்றவர் ஆய்ந்திடத் தக்கதாம் பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை
வான்திகழ் தளையென வகுப்பர் அன்னவே"

இறைவனின் ஐந்தொழில் பின்வருஞ் செய்யுளிற் கூறப்படுகிறது:

"அளித்திடல், காத்திடல், அடுதல், மெய்யுணர்
வொளித்திடல் பேரரு ளுதவலேயெனக்
கிளத்திடு செயல்புரிகின்ற நீலமார்
களத்தினன் பதியது கழறும் வேதமே."

ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களாற் பாதிக்கப்பட்ட உயிர்கள் எண்ணிலாதன என்றும், அவை அநாதியே உள்ளன என்றும், அவ்வுயிர்கள் நாம் புரிந்த நல்வினை தீவினைகளுக்கேற்பப் பிறந்திறந்து உழலுமென்றும் பின்வருஞ் செய்யுளிற் கூறப்படுகின்றன:

"மூவகை யெனும் தளை மூழ்கி யுற்றிடும்
ஆவிகள் உலப்பில அநாதி உள்ளன
தீவினை நல்வினை திறத்தின் வன்மையால்
ஒவற முறைமுறை உதித்து மாயுமே."

வீடு பெறுவதற்கு வழி பின்வருஞ் செய்யுளிற் கூறப்படுகின்றது:

"தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியும் அணையும் ஆங்கவை
வருவழித் தவமெனும் மாட்சி எய்துமேல்

---

*உறுதி இல்லாவிட்டால் நீங்கள் நல்லவர்களாக இருப்பது கூடக் கடினம்.* *- ஓர் அறிஞர்*

தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால்."

### முருகன் தமிழ் நாட்டுத் தெய்வம்

தொல்காப்பிய காலத்துக்கு முன்பிருந்தே முருகவழிபாடு தமிழ் நாட்டிலிருந்து வருகின்றது. ஆதியில் "சேயோன் மேய மைவரை உலகமும்" என்னுந் தொல்காப்பிய விதிக்கமைய முருகன் குறிஞ்சிநிலக் கடவுளாக இருந்து, பின்பு படிப்படியாகத் தமிழ்நாடு முழுவதற்குமுரிய கடவுளாக மாறிவிட்டான். தமிழ்நாடு முழுவதற்குமென்று கூறுவது அவனது வியாபகத்துக்குக் குறைவு ஏற்படுத்துவதாகும். அன்பர் வழிபடுமிடங்களிலெல்லாம் முருகன் எழுந்தருளுவான் என்று கூறுவதே பொருத்தமாகும். இக்கருத்தைத் திருமுருகாற்றுப்படை நன்கு விளக்குகின்றது.

"சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறியயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துஉடை நிலையினும்"
முருகன் எழுந்தருளுவான்.

மேலும் அன்பர் உள்ளமே அவனுக்குச் சிறந்த உறைவிடமாதலாலேயே அவனைக் "குகன்" என்று அழைக்கின்றனர்.

முருகன் வடநாட்டிலே அவதாரஞ் செய்ததாகக் கூறப்பட்ட போதிலும் அவனுடைய வழிபாடு அங்கு எக்காலத்திலுந் தமிழ் நாட்டிற்போலச் செழித்திருந்ததாகத் தெரியவில்லை. அங்கு அவனைப் பற்றிய நூல்களுமதிகம் இல்லை. இப்பொழுது பூனாவில் ஒரு கார்த்திகேயன் ஆலயம் உண்டென்றும், அங்கு அவர் பிரமச் சாரியாக இருப்பதால் பெண்கள் வழிபட அனுமதிக்கப்படுவதில்லை என்றுங் கூறப்படுகின்றது.

---

*சூழ்நிலைகளை வைத்தே நமது சிந்தனைகளும் செயற்படுகிறது. - டால்ஸ்டாய்*

வங்காளத்தில் தசராக் காலத்தில் முருகனை ஆண்டுக் கொருநாள் புத்திர பாக்கியம் விரும்புவோர் வழிபட்டு வருகின்றனர் என, சேர் பொன்னம்பலம் அருணாசலம் கூறுகின்றார்.

வடநாட்டில் முருக வழிபாட்டின் நிலையை "பதினெட்டுப் புராணச் சுருக்கம்" என்னும் நூலிலிருந்து நாம் நன்கறியலாம். அதிற் கூறப்படுவது பின்வருமாறு:

"வடநாட்டிலோ கார்த்திகேயன் என்ற பெயரே பிரசித்த மானது. அடுத்தபடி குமரன், ஸ்கந்தன் என்னும் பெயர்களை அறிவார்கள். சுப்பிரமணியன் என்ற பெயர் பிரசித்தமில்லை. அவருக்குத் தென்னாட்டில் உள்ளதுபோல் தனிச்சிறப்பான ஆலயங்களில்லை. சிவாலயங்களிலும் இங்குள்ளதுபோல் தனிச் சந்நிதி கிடையாது. சிலவிடங்களில் ஸ்கந்தன் பிரமச்சாரியென்றே கூறப்படுகின்றார்.

வள்ளி, தெய்வயானையுன்கூட சுப்பிரமணியன் இங்கு பூசிக்கப்படுகின்றார். ஆங்கு சிலவிடத்தில் தேவசேனாதிபதி என்று மாத்திரம் அறிவர். இங்கு தாரகன், சூரபத்மன், சிம்மவக்கிரன் என்ற மூவரையும் வதைத்ததாகக் கதை. அங்கு தாரகனை மாத்திரங் கொன்றதாகக் காணப்படுகின்றது. வள்ளி தேவசேனா விவாகம் தென்தேசத்தில்தான் விரிவாக இருக்கின்றது. காளிதாசன் என்னும் மகாகவி எழுதிய குமாரசம்பவம் என்ற மகாகாவியத்தில் தாரகனைக் கொன்ற கதையையே விரிவாக வர்ணிக்கின்றார். விவாகத்தைப் பற்றி வர்ணிக்கவில்லை.

தமிழ் நாட்டிற் சங்ககாலந் தொடக்கம் முருகனைப் பற்றி ஏராளமான நூல்கள் வெளிவந்துள்ளன. பதிற்றுப்பத்து, பரிபாடல், பத்துப்பட்டு (சிறப்பாகத்திருமுருகாற்றுப்படை), எட்டுத்தொகை என்னும் நூல்களில், முருகனைப் பற்றிய வரலாறும், அவன் துதிகளுங் காணப்டுகின்றன.

சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற பெருங் காப்பியங்களில் முருகனைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செல்வேள் அணிதிகழ் கோயிலும்" என்றும்,

---

*இறைவனை நேசித்தால் விவேகமும் வைராக்கியமும் தானாகவே வரும். - சுவாமி இராமகிருஷ்ணர்*

காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள கோயிலைக் குறிக்கும்போது, "கோழிச் சேவல் கொடியோன் கோட்டமும்" என ஊர் காண் காதையிலும் முருகன் கோயில்கள் குறிக்கப்படுகின்றன.

பன்னிருதிருமுறைகளிலும் முருகனைப் பற்றி ஏராளமான குறிப்புகள் உள்ளன. இவையெல்லாங் கச்சியப்பர் கந்தபுராணத்தைத் தமிழ்நாட்டுக் காப்பியமாகப் பாடுவதற்கு வழி வகுத்தனவெனலாம்.

**ஸ்காந்த மகாபுராணம்**

நாம் முன்பு குறிப்பிட்ட சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர் வெளியிட்டிருக்கும் ஸ்காந்த மகாபுராணம் பற்றிச் சிறிது ஆராய்வாம். இந்நூல் முன்பு கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்டு இருந்ததாகவும், தாம் இப்பொழுது முதன்முறையாகத் தேவநாகரி எழுத்தில் தமிழ் மொழி'பெயர்ப்போடு வெளியிட்டிருப்பதாகவுந் தீட்சிதர் அவர்கள் கூறியிருக்கிறார். இந் நூல் இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்டிருக்கின்றது. முதற் பகுதியிற் சம்பவ காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவகாண்டம் என்னும் ஐந்து காண்டங்களும், இரண்டாம் பகுதியில் தட்ச காண்டமும், உபதேச காண்டமும் அச்சிடப்பட்டுள்ளன. ஆகவே, சிவரகஸ்ய காண்டம் ஏழு காண்டங்களும் வெளிவந்துள்ளன.

இந் நூல் பழைய ஸ்காந்த புராணத்தின் ஒரு பகுதியா அல்லது பிற்காலத்தில் எழுதப்பட்டதா என்னுங் கேள்வி எழுகின்றது. முன் கிரந்த எழுத்தில் வெளியிடப்பட்ட பதிப்பிலேனும், இப்பொழுது தேவநாகரியில் வெளியிடப்பட்டிருக்கும் பதிப்பிலேனும், இந் நூல் பற்றிய வரலாறு கூறப்படவில்லை.

இந்நூலுக்கு முகவுரை எழுதிய ஆசிரியர் கி.வா. ஜெகந்நாதன் அவர்கள் தான், இது பழைய பதினெண் புராணங்களைச் சேர்ந்ததென்னுங் கருத்துப்பட எழுதியுள்ளார். அவர்கள் கூறுவது:

"அவர்கள் (பௌராணிகர்கள்) எடுத்து விளக்கிய நூல் வடமொழி ஸ்காந்த புராணமென்றே தோன்றுகின்றது. அத்தகைய பெரிய புராணத்தை வடமொழியிற் பல நாட்களுக்கு முன் புத்தக உருவில் ஒரு பெரியார் வெளியிட்டார். முருகனது புகழ்

*சிறந்த மனிதர்கள் தொடர்ந்து தங்களை மேன்மைப்படுத்திக் கொண்டே இருப்பர். - கன்பூசியஸ்*

நூல்களுக்கெல்லாம் மூலாதாரமாகவிருக்கும் அந்த அரிய நூலை மீண்ட்டும் பக்தர்களும் வித்துவான்களும் படித்தின்புறும் பேறு இப்போது கிடைத்திருக்கின்றது."

வியாச பகவான் அருளிய பதினெண் புராணங்கள் மகாபாரதத்துக்கும் முந்தியவை என்பது அறிஞர் கருத்து.

முன்பு கூறியதுபோல் இந்நூல்கள் இப்பொழுது முழு உருவத்திற் கிடைக்கவில்லை. ஆகவே, இதைப் பழைய நூலென்று கொள்வது பொருந்தாக் கூற்றாகத் தோன்றுகின்றது. மேலும், மூல நூல் கிரந்த லிபியிற் கிடைத்தபடியால் இது தமிழ்நாட்டுப் பௌராணிகர் ஒருவராற் பிற்காலத்தில் தமிழ் நாட்டில் வழங்கிய புராணத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டிருக்க வேண்டுமெனத் தோன்றுகின்றது.

இக்கருத்து, இந்நூலைக் கச்சியப்பர் கந்தபுராணத்தோடு ஒத்துப் பார்க்கும் பொழுது வலுப்பெறுகின்றது. முன்பு நாம் எடுத்துக்காட்டிய தமிழ்க் கந்தபுராண அமைப்பிலே இந்த ஸ்காந்த மகாபுராணமும் அமைந்திருக்கின்றது. தமிழ் நாட்டுத் தலங்களான திருப்பெருங்குன்றம், திருச்செந்தூர், திருச்சேய்ஞலூர், திருத்தணி, வள்ளிமலை முதலிய தலங்கள் வடமொழி ஸ்காந்தத்திலும் முக்கிய இடம்பெறுகின்றன. தெய்வயானை திருமணத்தின்போது, கச்சியப்பர் புராணத்திற்போல் வடமொழிப் புராணத்திலும் மாங்கலியதாரணம் நடைபெறுகின்றது. இது வடநாட்டாரறியாத தமிழ்நாட்டுக்கே சொந்தமான வழக்கமாகும். இனி, வள்ளி திருக்கல்யாணமும், வடநாட்டாரறியாத தொன்றாகும். கந்தபுராணத்தை ஒட்டியே சமயக் கருத்துக்களுங் கூறப்படுகின்றன. இவை போன்ற காரணங்களினால், இப்பொழுது தீட்சிதர் அவர்களால் வெளியிடப்பட்ட நூல் தமிழ்க் கந்தபுராணத்தைத் தழுவி எழுதப்பட்டதாகக் கொள்ள இடமுண்டு.

பெரிய புராணத்தைத் தழுவி உபமன்யு பக்த விலாசமும், திருவிளையாடற் புராணத்தைத் தழுவி ஹலாசிய மகாத்மியமும், எப்படி எழுதப்பட்டனவோ அப்படியேதான் ஸ்காந்த மகாபுராணம் எழுதப்பட்டதெனக் கூறலாம்.

---

தன் தவறான கருத்தை மாற்றிக் கொள்ளாதவன் தேங்கிய நீரை போன்றவன். தேங்கிய நீரில் அழிவுப் பூச்சிகள் வளர்கின்றன.

- ஒரு மகான்.

---

புகழ்ச்சியை முட்டாள்களின் உணவு என்று கூறுவர்.ஆனால் அறிஞர் களும் சில சமயங்களில் அதை உண்பதுண்டு. - சிந்தனாவாதி

# அஞ்சுவது யாதொன்றுமில்லை! அஞ்சவருவதுமில்லை!

இல்லறஞானி க. இராமச்சந்திரா

உலகம் முழுவதையும் தனது ஒரு குடைக்கீழ் ஆளவேண்டுமென்று ஆசைகொண்ட அலெக்சாந்தர், சைரஸ், டரியஸ் என்ற புகழ்பெற்ற மன்னர்களின் ஆட்சியால் முன்னாளில் சிறப்புற்றிருந்த பாரசீகத்தை வெற்றிகொண்டு, இந்துக்குஸ், ஆப்கானிஸ்தானம் மார்க்கம் மேற்கு இந்தியாவுள் நுழைந்து சிந்துநதிக்கு அருகிலிருந்த பாஞ்சாலத்தையும் கைப்பற்றினான். கங்கை நதிப்பிரதேசத்திலும் தன் கொடிபறக்கவேண்டுமென்ற அவனது கோரிக்கை வெறுங் கனவாய்மாறியதும், தனது தாய்நாடு திரும்பவேண்டிய நியதி அவனுக்கு ஏற்பட்டது. ஜீலநதிக்கரையில் சந்தித்த ஓர் சந்நியாசியைத் தனது இந்திய வெற்றியின் சின்னமாகத் தன்னுடன் அழைத்துச்சென்று, அலெக்சாந்திரியாவில் அவரை ஓர் காட்சிப்பொருள்போலப் பாவிக்க அவன் விரும்பினான். அரசனது உள்ளக்கிடக்கையை உணர்ந்த அச்சாது அந்த அழைப்புக்கிணங்காது மறுக்கவே, மன்னன் சினங்கொண்டு அவரைத் தனது கூரியவாளுக்கிரையாக்கப் போவதாகப் பயமுறுத்தினன். அப்போது அந்த மெய்ச்சாது 'மன்னனே! உன்வாழ்நாள் முழுவதிலும் இதுபோன்ற பொய்யை நீ கூறியது கிடையாது' எனக் கூறி உடல் குலுங்கச் சிரித்தார். அரசன் அவரின் ஏளனத்தில் ஞானங்கண்டு நல்லறிவு பெற்றுத் தன் வழிச்சென்றனன். இது நடந்தது வடநாட்டில் இற்றைக்கு 2275 ஆண்டுகளுக்கு முன்னராகும்.

இந்த நிகழ்ச்சி நடந்து ஏறக்குறைய ஆயிரம் வருஷங்கள் கழிந்தபின் தென்னாட்டில் அதேவித இன்னுமோர் அற்புதக்காட்சியைக் காண்கின்றோம். சிவ அபராதத்தால் உண்டாய கொடிய சூலை நோய், சிவனைப்பணிந்து, சிவப்பணி செய்தால் நீங்கும் என்ற நம்பிக்கை கொண்டு, தபோதனியாந் தமக்கையாரிடம் ஐந்தெழுத்தும் தீருநீறும் பெற்று உய்வடைந்த அப்பர் பல்லவ ராஜனான மஹேந்திரவர்மனின் சினத்திற்குரியவராயினார். "நிலைநின்ற நமது நெறியைத்துறந்த பொறியிலியை உயிரோடு விட்டால் நமது சமயம் அழிவுறும்' என்று அந்த அரசன்

---

*பிறரை வெறுப்பவரைத் தெய்வமும் வெறுத்துவிடும்.*

*- சுவாமி சாந்தானந்தர்.*

முன்னிலையில் சமணர்கள் கூச்சலிட்டனர். உடனே அப்பருக்குக் கட்டளை சென்றது. அவரோ 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' என்று பதிகம் பாடிப் பதிலிறுத்தனர்.

முந்திய காட்சியில் நாம் காண்பது வேதாந்த சாரமான உபநிடத உட்பொருளை. அதாவது, "ஆன்மா உள்ளே அணையா விளக்கு. உடல் இருந்தாலும் இறந்தாலும் அது போக்குவரவற்று உள்ளபடி உள்ள இடத்திலேயே ஒளிர்வது. உண்மையில் நான் என்பது உடலைக் கடந்த ஆன்மாவே. சக்திக் கனலாய் எரிவதும், சாந்தச் சுடராய் நிலவுவதும், சுத்தசின்மயமாய் பூரண சிற்சுகவாரியாய் நிறைவதும் அதுவே. அஃதின்றி எதுவுமில்லை. "நான் யார்? நான் அது, அது, அது ஆன்மா! சாவற்றவன்" என்னும் ஞானமார்க்க விளக்கத்தையே.

இரண்டாங் காட்சியில் நாம் காண்பது சித்தாந்த சாரமான பக்திமார்க்கத்து இறுதிநிலையான சரணாகதியின் விளக்கத் தையாகும். "நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்று கூறக்கூடிய அஞ்சாநெஞ்சுறுதியை அப்பருக்களித்தது, தாமார்க்கங் குடியல்லாத் தன்மையரான கோமார்க்கு மீளா அடிமையாக வாழும் பெருமித நிலையாகும்.

பெரிய புராணத்திலுள்ள வரலாறுகள் கற்பனைக் கதைகளல்ல, உண்மையில் நடைபெற்றவை, அவை விளக்கும் முறையில் பிறரும் வாழ்ந்து சித்தியடையச் சக்தியளிக்குந் தரத்தவை, என்னும் அரிய உண்மைகளை சென்ற நூற்றாண்டில் வாக்காலும் வாழ்க்கையாலும் விபரித்துக்காட்டியவர் நாவலர் பெருமான். அவரது வாழ்க்கையில் நாம் காணும் அச்சமின்மை அவர் வரலாற்றைப் படிப்பவர்க்கு 'விடுதலை' 'சுதந்திரம்' எனும் சொற்கள் நித்தியம் கேட்கப்படும் இருபதாவது நூற்றாண்டிலேயே, அச்சத்தையும் மயிர்க்கூச்சலையும் தருந் தரத்தாகும்.

அரசியல் அநீதிகளை எதிர்த்தும், அந்நிய மதத்தினரின் சூழ்ச்சிகளைத்தாக்கியும், நமது ஆலயங்களிலுள்ள ஊழல்களைக் கண்டித்தும் அவர் செய்த கிளர்ச்சிகள் பல. முதலில் வாழ்வால் நடந்துகாட்டி, பின்னர் வாயாற் பேசி, அதன் பிறகே நூல்களாக எழுதி உலகிற்கு உயர் சிவநெறியை விளக்கிய இந்த மகானை காலம் அறிந்து கொள்ளவில்லை. ஆகையால் அவர் கிளர்ச்சிகளைப் பல தன்னலப் புலிகளும், ஆசாரக் கள்வரும்,

---

*சுயகௌரவம் இல்லாத பெண்ணை பெண்என்றே கூற முடியாது. - அன்னை சாரதாதேவி*

பதவிவேட்டைக் குலாமிகளும் எதிர்த்தனர். அவரைக் கொல்லக்கூடச் சிலர் சூழ்ச்சி செய்தனர். இச்சதிச்செய்தி நாவலர் செவிக்கெட்டியபோது அவர் என்ன செய்தார்? நாம் இன்று நம்நாட்டில் காணும் பல தலைவர்கள் போல அவர் அஞ்சி, நடுங்கி மறையவில்லை' மிரள மிரள விழிக்கவுமில்லை வீட்டின் கதவைத்தாழிட்டு தெருவில் காவல் வைக்கவுமில்லை. எவரும் வரலாமென அழைப்பவர்போல் வீட்டைத்திறந்துவைத்து, ஐந்தெழுத்தோதித் திருநீறணிந்து, திருமுருகாற்றுப்படையைப் பாராயணஞ்செய்து கொண்டிருந்தனர். இக்காட்சியைக்கண்ட கொலையாளர் தலைவணங்கி குலைநடுங்க வந்தவழியே திரும்பிச்சென்றனர். எனினும், நாவலரின் உறவினர் பின்னும் அஞ்சினர். அவர்கட்கு அவர் 'சிவனிருக்கிறான், சத்தியம் வெல்லும்' என்று தைரியங் கூறினர்.

உண்மையான அச்சமின்மை வரவேண்டுமெனில், வாழ்வில் சீலமும், தியாகமும், சத்தியமும் நிராசையும் நிலைபெறவேண்டும். இப்போதுள்ள பதவிக்கு எப்போதாவது மோசம்வந்துவிடுமோ என்ற கிலேசமும், அதைப்பெற ஆதரவுதந்தவர்கள் பின்னர் அதை மறுக்காவிதத்தில் அவர்களை ஏமாற்றும் தந்திரமும், சூழ்ச்சியும், கபடமும் சதாநிறைந்துள்ள உள்ளத்தில் அச்சமின்மைக்கிடமேது? அஞ்சத்தக்கவையான மது, சூது, வாது முதலானவற்றைக் கண்டு அஞ்சாத நெஞ்சினரை தெய்வீகக்குணங்களுள் தலையாய அச்சமின்மை அணுகவேமாட்டாது. நாவலராகவும் காந்தியாகவும் பேரெடுக்க விரும்பி நடக்கும் தலைவர்கள் அந்த மகான்களுக்கு இறவாப்புகழைத் தேடிக்கொடுத்த ஒழுக்கத்தை முதலில் பேணுவார்களாக. நாவலரின் வாழ்க்கையும் வாக்கும் நமக்குச் சதாநினைவூட்டும் முக்கிய உண்மை இதுவே.

அவரின் குருபூசைத்திருநாள் கார்த்திகைமாத மகநட்சத்திரமாகும். இத்தொடர்பில் இம்மாத 'ஆத்மஜோதி' அவரின் திருவுருவப்பொலிவுடன் வெளிவருகின்றது.

அச்சமுற்ற அடிமைகளாய அயலார்க்கஞ்சி
அன்னியரின் மதம்புகுந்து அவர்தங்கையால்
பிச்சைபெறும் நிலையடைந்த பேதைமாக்கள்
பிறப்புரிமை சிறப்பாக எடுத்துக்காட்டிப்
பச்சைமரத் தாணிபோற் பதியுஞ்சொல்லாற்
பாதிரிமார் வாயடங்கப் பதிலுங்கூறி
இச்சகத்தில் எம்சைவந் தழைக்கச்செய்த
எழில்நல்லை நாவலன்றாள் வணங்கிவாழ்வாம்.

# இசை மழையில் நனைத்த
# சுருதிலய இசைக்கல்லூரியின்
# இராக சங்கமம் - 2011

- சாவைக் குயில் -

கோடையில் மழை வந்தால் எப்படி இதமாக இருக்குமோ அப்படி ஒரு சுகம் தந்தது கோடையின் ஆரம்பத்திலேயே இசை மழை பொழிந்து ஓய்ந்த இராகசங்கமம் - 2011. இந்த விழா இசைக்கலைமணி, இசைக்கலா வித்தகர் திருமதி. மகேஸ்வரி கார்த்திகேசு அவர்களின் சுருதிலய இசைக் கல்லூரியினால் ஜூன் மாதம் 25 ஆம் திகதி அன்று பிரம்டன் ஸ்ரீ கற்பக விநாயகர் கலாச்சார மண்டபத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது.

ஆசிரியையின் மூத்த சகோதரரும் பாரியாரும் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்க மாணவர்களால் இறைவணக்கம், கனடாப்பண், தமிழ்த்தாய் வாழ்த்து என்பன அழகாக இசைக்கப்பட்டன. அகவணக்கம் செலுத்தப்பட்டபின் நிகழ்வுகள் ஆரம்பமாகின. வரவேற்புரையை கல்லூரி மாணவன் செல்வன்.நிரோன் சுகுமார் நிகழ்த்த நிகழ்ச்சிகளைத் தமிழில் திருமதி.கிருஷ்ணவேணி சோதிநாதனும் ஆங்கிலத்தில் செல்வி. சாமிலி கார்த்திகேசுவும் தொகுத்து வழங்கினர்.

இசைவிழாவிற்குப் பிரதம விருந்தினராக புகழ் பூத்த மூத்த கலைஞர் கவிநாயகர்.வி.கந்தவனமும் பாரியாரும் சிறப்பு விருந்தினராக சங்கீதபூசணம் திருமதி. பூமணி இராஜரட்ணம் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

செல்வி.பிறேமிலி கார்த்திகேசு அவர்களால் பைரவி ராக அடதாள விரிபோணி வர்ணத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமாகி ஹம்சத்வனி ராக மூலாதார மூர்த்தி விநாயகர் கீர்த்தனத்துடன் கச்சேரி தொடங்கி அதைத் தொடர்ந்து மாணவர்களின் பிரிவுகளின் பிரகாரம் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பக்கவாத்தியங்களாக செல்வி.விரோதி ஸ்ரீகணேஸ் வயலின் இசை வழங்க செல்வன். செந்தூரன் கார்த்திகேசு, செல்வன். சியாம் சந்திரகுமார் மிருதங்க இசை வழங்க செல்வன்.கஜன் செல்வானந்தன் கடம் இசைக்க செல்வன். பிரவீன் பிரபாகரன் மோர்சிங் வாசிக்க கச்சேரி களை கட்டியது.

---

*அறிவு என்பது நாம் வானுலகு ஏறுவதற்குரிய வலிமையான சிறகு.* *- சேக்ஸ்பியர்*



செல்வி.பிறேமிலி கார்த்திகேசு அவர்களின் சாருகேசி ஆதிதாள க்ருதி ஆடமோடி, மதுவந்தி தில்லானா என்பனவும், செல்வன் மதுசன் சுகுமார் அவர்களின் ஸ்ரீராக ஆதிதாள ஸ்ரீதியாகராஜா சுவாமிகளின் பஞ்சரத்னம், செல்வி. சியானி குகதாசனின் பாடல்களும் செல்வன். கவிசன் நவீந்திரராஜாவின் 'மருதமலை மாமணியே' என்ற பாடலும் விழாவிற்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்திருந்தது.

சுருதிலய இசைக்கல்லூரி அதிபர் திருமதி.மகேஸ்வரி கார்த்திகேசு அவர்களின் சக ஆசிரியை திருமதி. கமலா ஸ்கந்தகுமார் அவர்கள் சிறப்புரையாற்றினார். கவிஞர். வி.கந்தவனம் அவர்களும் சங்கீதபூசணம் திருமதி. பூமணி இராஜரட்ணம் அவர்களும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் கல்லூரி அதிபர் திருமதி.மகேஸ்வரி கார்த்திகேசு அவர்களின் கலைப்பயணம் பற்றிச் சிறப்புரைகள் ஆற்றினர்.

ஆசிரியை இசைக்கலைமணி. இசைக்கலாவித்தகர் திருமதி.மகேஸ்வரி கார்த்திகேசு அவர்களை ஆடற்கலை ஆசிரியை கலைமணி, கலாபூசணம் ஸ்ரீமதி துவாராகா கேதீஸ்வரன் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். கல்லூரி மாணவி செல்வி.ஆரணி சிறிகுமார் அவர்கள் நன்றியுரையைத் தொடர்ந்து சுருதிலய இசைக்கல்லூரி மாணவர்கள், பக்கவாத்தியக் கலைஞர்களுக்குச் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்பட்டன. செல்வி. பிறேமிலி கார்த்திகேசு அவர்கள் திருப்புகழ் இசைக்க சபையோரின் பலத்த கரவொலியுடன் இராக சங்கமம் -2011 இனிதே நிறைவுக்கு வந்தது.

**23ஆம் பக்கம் பார்க்க**

---

*நம்பிக்கை, நன்நடத்தை, நல்லொழுக்கம், நல்லுறவு இவையே வெற்றிக்கான வழிகள். - ராஜாஜி*

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம்

1. இறைவனை நினைந்து ஒரு நாளைக்கு மந்திரம் ஓதாவிட்டாலும் கடவுள் வழிபாடாற்றித் தியானம் செய்யாவிட்டாலும் அகங்காரமாகிய கழிம்பு உள்ளத்திலே வளர்ந்துவிடும்.

2. நாம் தினமும் ஓதும் மந்திரங்களினால்தான் மனதில் உள்ள அகங்காரம் அணுஅணுவாய்க் குறைந்து கொண்டு வருகிறது.

3. நாம் உலகியல் பிரச்சினைகளால் இறைவனை நினைந்து ஒரு நாளைக்கு மந்திரம் ஓதாவிட்டாலும் உயிருக்குப் பெரும் கேடு உண்டாகும். அன்றைய தினம் கடவுளோடு சம்பந்தம் இல்லாத தினமாக ஆகிவிடும்.

4. மிருக வாழ்க்கைக்கும் மனித வாழ்க்கைக்கும் இடையில் ஒரு சிறு எல்லைக்கோடு இருக்கிறது. அதுதான் கடவுள் நினைவு. கடவுள் நினைவு உள்ளவன் மனிதனாகிறான். கடவுள் நினைவு இல்லாதவன் மிருகமாகிறான்.

5. மனித வாழ்வு வாழவிரும்பினால் இன்றே இறைவனுடைய நாமத்தை ஓதுங்கள். இறைவன் வேறு, இறைவனுடைய நாமம் வேறல்ல. இரண்டும் ஒன்றே.

6. இறைவனுடைய நாமம் இடைவிடாது மனதில் பதிந்திருக்குமானால் மனம் தான் நினைத்த இடமெல்லாம் அலையாது நாம் சொன்னபடியெல்லாம் அது கேட்கும்.

7. இறைவனிடத்தில் சரண் புகுந்தவர்கள் இறைவனின் பெருங்கருணையால் தங்களுக்கு வரும் மனக்கவலையைப் போக்கிக் கொள்ள முடியும். மற்றவர்களால் முடியாது.

8. இறைவன் தருமங்களின் சமுத்திரம். சாதாரண சமுத்திரம் போல, அலைமோதிக்கொண்டிருக்கும் அமைதியற்ற சமுத்திரம் அல்ல. அசைவில்லாத சாந்தமயமான சமுத்திரம். அந்தச்

---

**மனிதன் தன்னை மேன்மேலும் உயர்த்திக் கொள்ளாவிடில் அவன் இழிந்த பிறவிதான். — ஓர் அறிஞர்**

9. சமுத்திரத்தை அணுகினால் நமக்கு அற உணர்ச்சியும் அமைதியும் கிடைக்கும்.

10. பிறர் ஒருவர் தீய சொற்களால் நம்மை வையும்போது எமது மனம் என்ன பாடுபடும். அதேபோல நாம் பேசும் தீய சொற்களும் மற்றவர்களுடைய மனதைப் புண்படுத்தும் என்பதை உணர வேண்டும்.

11. கேட்பதற்கு இனிமையாகவும் மற்றவர்கள் இரக்கப்படும் அளவிற்கும் பேசினால் மட்டும் போதாது. இனிமையாகப் பேசும்பொழுது அகத்தில் (உள்ளத்தில்) வஞ்சனை எண்ணாமலும் இருக்க வேண்டும்.

12. தானம் கொடுப்பதில் புண்ணியத்தின் பலனுண்டு. தானம் கொடுக்க முடியாவிட்டாலும் இனிய வார்த்தைகளை அன்போடும் வஞ்சகமில்லாமலும் சொன்னால் அதனால் தானம் கொடுத்த பலனைக் காட்டிலும் அதிக நன்மையுண்டு.

13 உலகில் எல்லாராலும் மிக இலகுவாகச் செய்யக்கூடிய அறம் இன்சொல் பேசுதலாகும்.

14. மனம், வாக்கு, காயம் என்ற மூன்றும் சுத்தமாகச் சேர்ந்த வஞ்சகமற்ற இன்சொல்லே அறமென்று கூறப்படுகிறது.

15. பிறருடைய மனம் வருந்தும் சொற்களை நாம் சொல்லும்போது அவர்களுடைய பாவத்தின் ஒருபகுதியை நாமும் பெற்றுக் கொள்கின்றோம்.

16. சான்றோருக்கு ஒரு சிறு பொருளைக் கொடுத்தால் கூட அதன் பயன் பெரிதாய் இருப்பதுபோல நல்லவர்களுக்குச் செய்யும் பாவமும் பெரிதாகவே இருக்கும்.

17. மறந்தும்கூட ஒருவனுக்குத் தீங்கு நினைக்கக்கூடாது. நினைத்தால் அப்போதே தருமதேவதை அப்படி நினைக்கின்றவனுக்குக் கேடு உண்டாக்க நினைத்துவிடும்.

---

*மனிதன் பூரணத்துவம் அடைவதற்கு ஆத்மீக வாழ்வு அவசியம்*

*- ஒரு ஞானி*

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க





**Siva Shanmuganathan**
Real Estate Broker
***Cell: 416-545-7482***

**Joy Selvanayagam**
Real Estate Broker
***Cell: 416-358-6928***

HOMELIFE HIGHER STANDARDS

**Homelife/Future Realty Inc.,Brokerage,**
**7 Eastvale Drive Unit 205 , Markham, L3S 4N8**
**905-201-9977, Fax: 416-335-5535 / 905-201-9229**

# APPLEMORE
# AUTOMOTIVE INC.

## வாகனப்புகை வெளியேற்றப் பரிசோதனை

ONTARIO'S DRIVE CLEAN
For the air we breathe

## Ontario Emission Inspection



ஒன்ராறியோ அரசாங்கத்தினால்
அங்கீகரிக்கப்பட்ட வாகனப்பரிசோதனை நிலையம்
குறைந்த விலையில், குறைந்த காலத்தில்
குறையில்லாது உங்கள் வாகனத் திருத்த
வேலைகளை செய்து கொள்ள வாருங்கள்

**TEL: (416) 285-4998**
**435 MIDWEST ROAD, UNIT # 1A & 5B**
**SCARBOROUGH, ONT.**

# முருகன் புத்தகசாலை



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகள்
இறக்குமதி செய்து விற்பனை
செய்கிறோம்

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**WESTERN UNION
MONEY TRANSFER**

**GTA MALL, 5215 Finch Ave. E. Unit 109**
**TEL: 416-321-0285**

# விவேகா அச்சகம்

VIVEKA *Printers*

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**1911 KENNEDY ROAD, UNIT # 100**
**TEL: 416-807-7468**
**416-410-6401**